REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 பெப்ரவரி 28 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 50 | Monday 28, February, 2022 | 24 பக்கங்கள் | 30/-

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம்;
தகவல் தெரிந்து நான் சிங்கப்பூர் செல்லவில்லை
பொய்க் குற்றச்சாட்டு – மைத்திரி மறுப்பு

(ஷம்ஸ் பாஹிம்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்த நிலையில் தான் சிங்கப்பூருக்கு சென்று 06

மக்களின் சுதந்திரம், எதிர்பார்ப்புகளை அரசாங்கம் நிச்சயம் உறுதி செய்யும்

ஜனநாயக முறைமையிலிருந்து ஒருபோதும் விலகமாட்டோம்

நாட்டை ஆட்சி செய்யும் போது, பொதுமக்களின் சுதந்திரம் மற்றும் எதிர்பார்ப்புகளை உறுதி செய்யும் ஜனநாயக முறைமையிலிருந்து விலகப்போவதில்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இருப்பினும், அதனால் கிடைக்கும் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டாமென்று அனைத்துத் தரப்பினரிடமும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

ஒரு இலட்சம் மகாவலி ரண்பிம காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு, 06

இலங்கை முழுவதும் சம அளவில் அபிவிருத்தி பணிகள் முன்னெடுப்பு

முன்னெப்போதும் இல்லாத யுகம் என பிரதமர் பெருமிதம்

ஒரு பிரதேசத்திற்கோ மாகாணத்திற்கோ மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது முழு இலங்கையும் சமமாக அபிவிருத்தியடையும் இவ்வாறானதொரு யுகம் இதற்கு முன்னர் காணப்படவில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிரம கட்டுவன ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் மற்றும் கிரம பஸ் நிலையம் ஆகியவற்றை திறந்து வைத்து 06

எரிபொருள் தட்டுப்பாடு எதிரொலி;
தனியார் பஸ் சேவைகளை மட்டுப்படுத்த தீர்மானம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை கருத்திற்கொண்டு இன்று திங்கட்கிழமை முதல் தனியார் போக்குவரத்து பஸ் சேவைகளை மட்டுப்படுத்த நேரிடும் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார். 06

ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்:
இலங்கை மீதான அறிக்கைக்கு அன்றைய தினமே பதிலளிக்க முடிவு

அமைச்சர்கள் பீரிஸ், அலி சப்ரி தலைமையில் குழுவினர் தயார் நிலையில்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 49வது கூட்டத்தொடர் இன்று திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகிறது. இலங்கை தொடர்பான விவாதம் எதிர்வரும் 3ஆம் திகதி இடம்பெறவுள்ளதுடன் அன்றைய தினம் மனித உரிமை ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கைக்கு அன்றே 06

எவருக்கும் அஞ்சி தனது நிலைப்பாட்டிலிருந்து இலங்கை விலகாது எனவும் அரச தரப்பு அறிவிப்பு

45 வது சென்னை புத்தகத் திருவிழா நந்தனம் Y.M.C.A. மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (27) மாலை நடைபெற்ற போது, மணிமேகலை பிரசுரத்தின் 45 நூல்களின் முதல்பிரதிகளை இலக்கிய புரவலர் ஹாசிம் உமரிடம் அமைச்சர் மா.சுப்ரமணியன் வழங்குகிறார். டாக்டர் நல்லி குப்புசாமி, இயக்குனர், நடிகர் திரு முருகன், அனிதா குப்புசாமி, ரவி தமிழ் வாணன் ஆகியோர் உடன் காணப்படுகின்றனர்.

உக்ரைனிலுள்ள இலங்கையரை அழைத்து வர நடவடிக்கை
அங்காராவிலுள்ள இல. தூதரகம் அறிவிப்பு

3

அதிகரித்து வரும் எரிபொருள் நெருக்கடியை சமாளிக்க
வேலைநாட்களை நான்கு தினங்களாக குறைக்க மத்திய வங்கி அரசுக்கு யோசனை
அரச வங்கிகள் CPCக்கு கடன் வழங்குவதை நிறுத்தவும் ஆலோசனை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை கவனத்திற்கொண்டு வாரத்தில் வேலை நாட்களை நான்கு தினங்களாக குறைத்து வேலைசெய்யும் மணித்தியாலத்தை அதிகரிப்பதற்கு மத்திய வங்கி யோசனைகளை முன்வைத்துள்ளது. 06

போதுமான மருந்து வகைகள் கையிருப்பில் உள்ளன
அரச மருந்து உற்பத்தி வழங்கல் பிரிவு அறிவிப்பு

அரச மருத்துவமனைகளில் அடுத்த மூன்று மாதங்களுக்கு போதுமான மருந்துகள் கையிருப்பில் இருப்பதாக அரச மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தனியார் துறைக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி 06

தொழிற்சங்க பிரிவே ரூ.1000 கிடைக்காமைக்கு காரணம்;
விசேட சட்டங்களை கொண்டு வந்தேனும் சம்பள அதிகரிப்பு
தொழிலாளர் நலனில் அரசு அக்கறை

தேவையேற்பட்டால் விசேட சட்டங்களை கொண்டு வந்து பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை உறுதிப்படுத்துவதாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பெருந்தோட்டங்களின் உரிமையை தொழிலாளர்களுக்கு வழங்கும் வகையில், நாட்டின் பெருந்தோட்டக் கொள்கை மாற்றமடைய வேண்டும் 06

அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே எரிபொருள் வழங்கல்?
இந்நிலை ஏற்படலாம் என CPC தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே எரிபொருளை விநியோகிக்க முடியும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. அது தொடர்பில் கருத்து தெரிவித்த கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரி, கொழும்பு துறைமுகத்துக்கு 06

மின் துண்டிப்பு நடைமுறை மூன்று மாதங்கள் தொடரலாம்
– மின்சார சபை உயரதிகாரி எதிர்வு கூறுகிறார்

லோரன்ஸ் செல்வநாயகம்

தற்போது நடைமுறையிலுள்ள மின் துண்டிப்பை குறைந்தது மூன்று மாத காலத்திற்கு மேற்கொள்ள வேண்டி நேரிடும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின் துண்டிப்புக்கான நேர அளவில் மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் எனினும் தொடர்ந்து மூன்று மாத காலங்களுக்கு மின் 06

இலங்கை உதைப்பந்தாட்ட வீரர்
மாலைதீவில் மர்மமான முறையில் உயிரிழப்பு

இலங்கை உதைப்பந்தாட்ட அணி வீரரும் மாலைதீவின் கழக அணி வீரருமான பியூஸ் நேற்று முன்தினம் (26) மாலைதீவில் உயிரிழந்துள்ளார். மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த டக்ஸன் பியூஸ்லஸ் என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார். மன்னார் புனித சவேரியார் ஆண்கள் 06

ஒன்றுகூடல் நிகழ்வுகள் அதிகரிப்பால் ஆபத்து!
PHI சங்க தலைவர் உபுல் எச்சரிக்கை

நாடளாவிய ரீதியில் பல பகுதிகளில் நடைபெறும் இசைக் கச்சேரிகள் உள்ளிட்ட சமூக ஒன்றுகூடல்களால் எதிர் காலத்தில் கொவிட் 19 வைரஸ் பரவும் அபாயம் இருப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனூடாக தடுப்பூசிக்கு பதிலளிக்காத கொவிட் வகையை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் 06

உக்ரைன் பிரஜைகள்;
இலங்கையில் தங்கியுள்ள காலத்தை நீடிக்க முடிவு

3

எல்லை தாண்டி மீன் பிடித்த 8 தமிழக மீனவர்கள் கைது
கிளிநொச்சி கடற்படை முகாமில் விசாரணை

3

இணையவழியூடாக இடம்பெறும் குற்றச் செயல்கள் அதிகரிப்பு
இளம் பெண்களுக்கு பாதிப்பு; பொலிஸ் எச்சரிக்கை

3

கார்கோவ் நகருக்குள் நுழைந்துள்ள
ரஷ்ய படைகளுடன் உக்ரைன் இராணுவம் கடும் மோதலில்

எண்ணெய் மற்றும் எரிவாயு நிலைகளில் பாரிய வெடிப்பு

உக்ரைன் மீது படையெடுத்திருக்கும் ரஷ்ய இராணுவம் நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய நகரான கார்கோவுக்குள் நுழைந்திருப்பதோடு எண்ணெய் மற்றும் எரிவாயு நிலைகளில் பாரிய வெடிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. வடகிழக்கு நகரான கார்கோவுக்குள் நுழைந்த ரஷ்ய படையினருடன் அங்கும் உக்ரைனிய இராணுவம் வீதிகளில் உக்கிர மோதலில் ஈடுபட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. 06

"பாபிகியூவ்" இயந்திர நச்சு வாயு வெளியேறி
நுவரெலியா விடுதியில் தம்பதியின் சடலங்கள் மீட்பு
சுற்றுலாவுக்கு வந்த இடத்தில் சோகம்

நுவரெலியா தினகரன் நிருபர்

குருநாகல கொக்கரல்ல பகுதியிலிருந்து உல்லாசப் பிரயாணிகளாக நுவரெலியாவிற்கு வருகை தந்த ஆண் (59) ஒருவரும் பெண் (57) ஒருவரும் நேற்று உயிரிழந்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு 06

விக்கல் வீராச்சாமி

பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேணும், இல்லையெண்டா போராட்டம் வெடிக்கும், பஸ் ஓடாது என எச்சரிக்கை விடுத்திருக்கினம்....

டீசல் இல்லாம நாளைக்கு பஸ் ஓடுமோ எண்ட பயத்தில சனம் இருக்குது, இவங்க இப்பதான் கட்டணத்தை அதிகரி, மானியம் வழங்கு எண்டு...!!!

ஒரு இலட்சம் மகாவலி ரண்பிம காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு

ஒரு இலட்சம் மகாவலி ரண்பிம காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு எம்பிலிபிட்டிய மகாவலி மைதானத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கமைய, சிக்கல்களற்ற காணிகளின் உரித்துரிமையை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், ரண்பிம காணி உறுதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ,அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, வாசுதேவநாணயக்கார, பவித்ரா வன்னியாரச்சி உட்பட பலரும் கலந்து கொண்டார்கள்.

கிரம - கட்டுவன ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் திறந்துவைப்பு

கிரம கட்டுவன ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் மற்றும் கிரம பேருந்து நிலையம் என்பன பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வுகளில் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார, நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

50ஆவது ஆண்டு நிறைவினை கொண்டாடிய Crysbro

Crysbro என்பது இலங்கையில் கோழிப் பண்ணை உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நிறுவனமாகும். நலச்செழுமையும் போஷணையையும் கொண்ட உணவினை மக்களுக்கு வழங்குவதன் மூலம் மக்களை ஒன்றிணைக்கும் நாட்டின் ஒரே "சிக்கன் ஸ்பெஷலிஸ்ட்" ஆக திகழும்Crysbro தமது 50ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகின்றது.

Crysbro ஆனது உற்பத்தியாளர்களுக்கு உணவுப் பாதுகாப்பில் உயர் தரத்தைப் பேணுவதற்காக அமைக்கப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் ஆழ்ந்த உறுதியுடன் திகழும் நிறுவனமாக எப்போதும் இருந்து வருகிறது. உணவுப் பாதுகாப்பானது நேரடியாக இறுதித் தயாரிப்பின் தரத்தினை நிர்ணயிக்கிறது.

அந்த இறுதித் தயாரிப்பின் தரமானது அவ்வாறு நுகர்வோரைச் சென்றடையும் போது 50 ஆண்டுகளுக்கு முன் தாபிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை கம்பனியின் செயற்பாட்டில் முன்னணியில் உள்ளது.

Crysbro 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இலங்கை நுகர்வோருக்கு சிறந்த சுவை மற்றும் ஊட்டச்சத்தை வழங்குவதன் மூலம் முழுமையான வசதியுடன் சிறந்த சமையல் அனுபவத்தை உருவாக்குவதற்கான ஒரு நோக்கத்தை இதன் தாபகர் கொண்டிருந்தார். 100 குஞ்சுகளைக் கொண்ட அதன் எளிமையான தொடக்கத்திலிருந்து, நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி *Crysbro* படிப்படியாக அதன் வசதிகளை மேம்படுத்தியது. இது அனைத்து இலங்கையர்களுக்கும் சந்தையில் சிறந்த தரம் மற்றும் சுவையான கோழி தயாரிப்புக்களை வழங்க உதவியது. கடந்த 50 ஆண்டுகள் காலமாக *Crysbro* தேசத்தை போஷித்து, கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தியதன் மூலம் இலங்கைக்கு பெருமை சேர்க்கும் விளையாட்டுகளுக்கும் ஆதரவளித்து, பல பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு திட்டங்களை முன்னெடுத்தல் போன்றவை மூலம் நாட்டிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை செய்துள்ளது.

நாடு முழுவதும் அமைந்துள்ள சோள உற்பத்தியாளர்கள் மற்றும் கோழி உற்பத்தியாளர்களின் வாழ்வினை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் இது மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இவர்கள் *Crysbro* வின் வலுவான தொடர்புகள், கோழிகளுக்கு உணவாக அளிக்கப்படும் சோளத்தை வழங்குகின்றனர் அல்லது நிறுவனத்துடன் இணைந்து கோழிகளை வளர்க்கின்றனர்.

மேலும் *Crysbro* ஆனது ஒரு முறையான பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. அவை ஒப்பந்த வளர்ப்பு பிராணிகள், ஒப்பந்த மிருக வளர்ப்பாளர்கள் மற்றும் ஒப்பந்த விவசாயிகள் திட்டங்கள், பாடசாலை புத்தகங்களையும் எழுதுபொருட்களையும் தகுதியான மாணவர்களுக்கு விநியோகித்தல், மருத்துவமனை வோர்ட்களை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல், வீதிகளை புதுப்பித்தல் மற்றும் புதிதாக வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்களுக்கு வெகுமதிகளை வழங்குதல் போன்றவை அடங்குகின்றன.

எசட்லைன் புதிதாக அறிமுகப்படுத்திய 'லியதிரிய' வைக் கொண்டாடும் நோக்கில் மாத்திவெலவில் உள்ள ப்ரோரைட் சேஃப்டிட் ரைடிங் அக்கடமியில் பாதுகாப்பாக வாகனம் செலுத்தல் பற்றிய நிகழ்ச்சி நடத்தப்பட்டது. முழு நாள் நடைபெற்ற இந்தநிகழ்வில் கலந்து கொண்ட பெண்களுக்கு வாகனம் செலுத்துவது குறித்த உத்திகள் பற்றிய விரிவானபயிற்சிகள், வீதிப் பாதூப்பு நடைமுறைகள், வீதி ஒழுங்குகள் பற்றியநடை முறைமற்றும் கோட்பாட்டு ரீதியான விடயங்கள் பற்றிய எழுத்துப் பரீட்சை நடத்தப்பட்டதுடன், வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

உள்நாட்டு வியாபாரங்களுக்கு வலுச்சேர்க்கும்

'Business Banking' அறிமுகம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, நாட்டின் வணிக வியாபாரத்துறையை மேம்படுத்தி வலுச் சேர்த்திடும் வகையில்'Nations Business Banking'ஐ மீள அறிமுகம் செய்துள்ளது. உள்நாட்டு வர்த்தக சமூகத்தின் தொடர்ச்சியான மற்றும் நெருக்கமான பங்காளர் எனும் வகையில், புதிய தயாரிப்பினூடாக பரந்தளவு பெறுமதி சேர்க்கப்பட்ட, பிரத்தியேகமான நிதித் தீர்வுகள், டிஜிட்டல் மற்றும் வாழ்க்கைமுறை அனுகூலங்கள் போன்றன பரிபூரண வங்கிச் சேவை அனுபவத்தை வழங்குவதாக அமைந்திருப்பதுடன், இலங்கையின் வியாபார சமூகத்தின் வெவ்வேறு தேவைகளை நிவர்த்திசெய்வதாக அமைந்துள்ளது.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் வணிக வங்கியியல் பிரிவின் சிரேஷ்ட உபதலைவர் அரோஷ லியனாரச்சி கருத்துத் தெரிவிக்கையில், "Nations Business Banking முதன்முதலில் அறிமுகம்செய்யப்பட்டது முதல், பல வியாபாரங்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களின் தேவைகளை நிவர்த்திசெய்து உறுதியான அடித்தளத்தைக் கொண்டமைந்துள்ளது. நவீன டிஜிட்டல் தீர்வுகளுடன், பரந்தளவு அனுகூலங்கள் மற்றும் பிரத்தியேகமான வெகுமதிகள் நாடு முழுவதையும் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது" என்றார்.

தினகரன் வர்த்தக உலகம்

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க NYSC உடன் இணையும் Meta

Meta, இலங்கையின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் (NYSC) கூட்டிணைந்து நாட்டில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தொழில் முனைவோருக்கான திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியது. இந்த *Meta Boost* முன்னெடுப்பின் மூலம் *NYSC* இன் ஏறத்தாழ 750 சேவைஅதிகாரிகளுக்கு பயிற்சியளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்மூலம் அவர்கள், தங்கள் வணிகங்களை வளர்க்க டிஜிட்டல்தளங்களைப் பயன்படுத்தும் 50,000க்கும்மேற்பட்ட உள்நாட்டு தொழில் முனைவோருக்கு வலுவூட்டுவர்.

இந்தபயிற்சியானது *NYSC* இன் *Hope 4 Sri Lanka* முன்னெடுப்பின் ஒருபகுதியாகும். இதுநாடுமுழுவதும் உள்ளஆயிரங்கணக்கான தொழில்முனைவோரை நிதியுதவி, வளங்கள் மற்றும் அதற்கான அறிவுடன் இணைக்கிறது.

இதன் அறிமுகநிகழ்வின் போது விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில் நுட்பம் மற்றும் நிறுவன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நாட்டின்பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் டிஜிட்டல்திறன்களின் முக்கியத்துவம் குறித்து பேசினார்.

"இன்றைய டிஜிட்டல் இலங்கையில்நமது பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தும் தொழில்முனைவோரது திறன்களை கட்டியெழுப்புவது மிகமுக்கியமானது என ராஜபக்ஷ தெரிவித்தார்.

Meta Boost மற்றும் *Hope 4 Sri Lanka* போன்ற திட்டங்கள்மூலம் நாங்கள் ஊக்குவிக்கப்படுகின்றோம். இவைதொழில் முனைவோருக்குஆதரவளித்து, அவர்களது வணிகத்தை மேம்படுத்த உதவுகிறது. எனத்தெரிவித்தார்.

அண்மையில் *DAI Global*, *IPSOS* உடன்கூட்டிணைந்து நடாத்திய ஆய்வின் மூலம் இலங்கையில் இந்த ஆய்வுக்குட்பட்ட சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களில் பாதிபேர் கடந்த ஆண்டு வணிக நோக்கங்களுக்காக டிஜிட்டல்கருவிகளை பாவித்துள்ளனர் என்பதை புலப்படுத்துகிறது. அவர்களில்சுமார் 83% பேர் பெருந்தொற்றுகாலத்தின் போது *Meta* வின்பயன்பாடுகள் தங்களுக்கு உதவியது என நம்புகின்றனர். எவ்வாறாயினும் ஒன்லைன் மற்றும் ஓஃப்லைன் தொழில் முனைவோர் ஒன்லைன் தளங்களைப் பயன்படுத்தும் போது பல சிரமங்களை எதிர்கொண்டதாகக் கூறினர். அதில் 45% ஆனோர் டிஜிட்டல் கருவிகளைப் யன்படுத்துவதற்கு போதுமான அறிவுதங்களிடம் இல்லாமையே இதற்கான காரணம் எனவும் நினைக்கின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
தினகரன்

2022 பெப்ரவரி 28 திங்கட்கிழமை

தொழுகை நேரம்

25 முதல் 28 வரை

சுபஹ்	05.09
லுஹர்	06.25
அஸர்	03.45
மஃரிப்	06.23
இஷா	07.33

இன்றைய சுபதினம்

பிலவ வருடம் மாசி 20

ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை

யோகம்: அமிர்தசித்த யோகம்

திதி: திரயோதசி

இராசி பலன்கள்

மேஷம்	பாராட்டு
ரிஷபம்	நிறைவு
மிதுனம்	தனம்
கடகம்	போட்டி
சிம்மம்	சுகம்
கன்னி	முயற்சி
துலாம்	நன்மை
விருச்சிகம்	கோபம்
தனுசு	வெற்றி
மகரம்	பொறுமை
கும்பம்	மறதி
மீனம்	செலவு

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

ஜம்பட்டா வீதியில் பாரிய தீ விபத்து

படம்: சமந்த வீரசிறி

கொழும்பு – ஜம்பட்டா வீதியில் இரசாயனப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிலையத்தில் நேற்று பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

தீயினால் உயிர் ஆபத்து எதுவும் ஏற்படாத போதும் அருகிலுள்ள வீடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்களுக்கு பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்ததாகவும் அதற்காக கொழும்பு மாநகர சபையின் 12 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் மாநகர தீயணைப்பு சேவைகள் திணைக்களம் தெரிவித்தது.

தீ அனர்த்தத்திற்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என தெரிவித்துள்ள அந்த திணைக்களத்தின் பொறுப்பதிகாரி எம். ஏ.பி. சேனாதீர எவ்வாறாயினும் தீ அனர்த்தத்தினால் களஞ்சியசாலை முற்றாக அழிவடைந்து ள்ளதாகவும் குறிப்பிட்டார். (ஸ)

5 வருடத்தில் எந்த மின்சார திட்டமும் இல்லை;

இன்றைய மின்வெட்டுக்கு நல்லாட்சி அரசே காரணம்

அமைச்சர் ஜோன்ஸ்டன் குற்றச்சாட்டு

மின்வெட்டு அமுல்படுத்தும் நிலை ஏற்பட்டதற்கு நல்லாட்சி அரசாங்கம் தான் காரணம் . அவர்களின் 5 வருட ஆட்சியில் எந்த மின்உற்பத்தி நிலையமும் நிர்மாணிக்கப்படவில்லை என ஆளும் தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பு, ஹொரணை 120 வீதியில் நிர்மாணிக்கப்படும் புதிய பாமன்கடை பாலத்தின் நிர்மாணப் பணிகளால் வீடுகளை இழக்கும் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ள புதிய வீடுகளின் சாவியை அமைச்சர் அண்மையில் கையளித்தார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து மின்வெட்டு காரணமாக எவ்வளவு காலம் இருட்டாக இருக்க வேண்டிய நிலை ஏற்படும் என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், நாட்டை இருட்டில் வைக்க முடிவு செய்தவர் அந்த நல்லாட்சி குழுவினர் தான். கடந்த ஐந்து ஆண்டுகளாக மின் உற்பத்தியை அதிகரிக்க எதுவும்

06

உக்ரைனிலுள்ள இலங்கையரை அழைத்து வர நடவடிக்கை

அங்காராவிலுள்ள இல. தூதரகம் அறிவிப்பு

(ஷம்ஸ் பாஹிம்)

உக்ரைனில் சிக்கியுள்ள இலங்கையர்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்துவரத் தேவையான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் 20 இலங்கையர்கள், போலந்து எல்லையூடாக உக்ரைனிலிருந்து வெளியேறும் எதிர்பார்ப்புடன் காத்திருப்பதாக அங்காராவிலுள்ள இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது.

உக்ரைனிலிருந்து இலங்கைக்கு திரும்பும் எதிர்பார்ப்புடன் அவர்கள் போலந்து எல்லையில் காத்திருப்பதாக துருக்கி, ஜோர்ஜியா மற்றும் உக்ரைனுக்கான இலங்கை தூதுவர் எம்.ஆர். ஹசன் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் எல்லைப் பகுதி அதிகாரிகளுக்கு தெளிவு படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்நிலையில், உக்ரைனில் சிக்கியுள்ள இலங்கையர்கள் அனைவரையும் போலந்து ஊடாக நாட்டிற்கு அழைத்து வருவதற்கான கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஹசன் கூறினார்.

06

உக்ரைன் பிரஜைகள்;

இலங்கையில் தங்கியுள்ள காலத்தை நீடிக்க முடிவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ரஷ்யா உக்ரைனுக்கிடையிலான மோதல் உக்கிரமடைந்துள்ள நிலையில் தமது நாட்டுக்கு செல்ல முடியாது இலங்கையில் தற்போது தங்கியுள்ள உக்ரைன் நாட்டவர்களின் வீஸா காலத்தை நீடிப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இன்று நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் அதுதொடர்பான விடயங்களை முன்வைத்து விரிவாக கலந்துரையாடவுள்ளதாக தெரிவித்துள்ளார். அதுதொடர்பில் தற்போது வெளிவிவகார அமைச்சு மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்துடன தாம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளுக்காக ஒரு மாத காலத்திற்கே விஸா வழங்கும் நடைமுறை உள்ளது. அத்தகைய நிலையில் இலங்கையில் தங்கியுள்ள உக்ரைன் நாட்டு பிரஜைகளின் வீஸா காலம் நிறைவடைந்துள்ள நிலையில் அதனை நீடிப்பதற்கு கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

06

இணையவழியூடாக இடம்பெறும் குற்றச் செயல்கள் அதிகரிப்பு

இளம் பெண்களுக்கு பாதிப்பு; பொலிஸ் எச்சரிக்கை

நாட்டில் இணையவழியூடான குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. சமூக வலைத்தளங்கள் ஊடாக இடம்பெறுகின்ற மோசடிகளால் 30 40 வயதுக்கு இடைப்பட்ட பெண்களே அதிகளவில் பாதிக்கப்படுவதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறு இணையவழி குற்றங்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் கணனி குற்ற விசாரணைப்பிரிவு தொடர்ந்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதோடு , அவை தொடர்பில் முறைப்பாடளிப்பதற்கு இரு பிரத்தியேக மின்னஞ்சல் முகவரியை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் , கடந்த ஆண்டு மார்ச்சில் கணனி குற்ற விசாரணைப்பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது. இந்த பிரிவிற்கு கடந்த ஆண்டில் மாத்திரம் 2500 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன, எனினும் தற்போது நிலைமை அதனை விட அதிகரித்துள்ளது.

நாளாந்தம் சுமார் 15 முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன, இலங்கையில் இடம்பெறும் இணைய குற்றங்களில் பெண்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். பெண்களின் புகைப்படங்களில் அவர்களின் முகத்தோடு வேறு நிர்வாண உடல் புகைப்படத்தினை இணைத்து இணையத்தில் வெளியிடுகின்றமை தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

06

விலையை மட்டுமன்றி மின் உபகரண பயன்பாடு குறித்தும் கவனம் அவசியம்

எம்.ஏ.அமீனுல்லா

மாலை 6.30 - 9.30 வரை பயன்பாட்டை குறைக்குமாறு கோரிக்கை

மின்சாதனங்களை பாவிக்கும் பொழுது விலையில் மட்டும் கவனம் செலுத்தாமல், பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவிலும் கவனம் செலுத்துவதும் அவசியம் எனவும் மேலும் மாலை 6.30, 9.30 மணிக்குள் " வொசிங் மெஷின் , தண்ணீர் இறைத்தல் அயன் பண்ணுதல் போன்றவற்றுக்கு முடிந்தவரை மின்சாதனப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது அவசியமென இலங்கை நிலை பெறுதகு வலு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார் .

எதிர்வரும் 2030ம் ஆகும்பொழுது நாட்டின் மின்சாரத் தேவை 28,000 ஜிகாவட் மணிநேரமாக இருக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அதில் 70 சதவீதம் காற்றலை மூலங்களிலிருந்து நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போது, நாட்டிலுள்ள முக்கிய நீர்மின் நிலையங்கள் உட்பட காற்றாலை மின் உற்பத்திகல் மூலம் சுமார் 7000 ஜிகாவாட் மணிநேர மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகவே இதனை எதிர்வரும் 2030ம் ஆண்டுக்குள் 20,000 ஆக உயர்த்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் 70வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கண்டி ஒக்ரே ஹோட்டலில் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர்

06

வெளிநாட்டு பயணிகளுக்கான கட்டுப்பாடுகளில் தளர்வு

பூரண தடுப்பூசி பெற்றிருப்பின் PCR தேவையில்லை

லோரன்ஸ் செல்வநாயகம்

முழுமையான தடுப்பூசியை பெற்றுக்கொண்டு இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் இனி விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் விசேட சுகாதார வழிகாட்டல் ஒன்றை அவர் வெளியிட்டுள்ளதுடன் நாளை மார்ச் முதலாம் திகதி முதல் இந்த செயற்பாடுகள் நடைமுறைக்கு வரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அந்த நாடுகளில் முழுமையான தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளமை உறுதிப்படுத்தப்படுமிடத்து அவர்கள் இங்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கோ அல்லது அன்டிஜன் பரிசோதனைக்கோ உட்படுத்தப்படவேண்டிய அவசியம் கிடையாது புதிய சுகாதார வழிகாட்டலில் அது உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில் நாளை முதல் அது நடைமுறைக்கு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை,

06

முஸ்லிம் சமய கலாசார திணைக்கள ஏற்பாட்டில்;

இன்று வெள்ளவத்தை ஜும்ஆ பள்ளிவாசலில் மிஃராஜ் தின நிகழ்வு

ருசைக் பாருக்

புனித மிஃராஜ் தின நிகழ்வுகள் இன்று (28) திங்கட்கிழமை இரவு வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கொழும்பு வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலுடன் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்ராஹீம் அன்சார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி பிரதம அதிதியாக கலந்து கொள்வார். ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில், பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், காதர் மஸ்தான் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பிப்பர்.

இந்நிகழ்வில், உலமாக்கள், அரச உயர் அதிகாரிகள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் ஜெமாஅத்தார்கள் எனப்பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு சார்பாக திணைக்கள கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் முப்தி முர்ஸி தெரிவித்தார்.

எல்லை தாண்டி மீன் பிடித்த 8 தமிழக மீனவர்கள் கைது

கிளிநொச்சி கடற்படை முகாமில் விசாரணை

ராமேஸ்வரத்திலிருந்து எல்லை தாண்டி மீன்பிடிக்க சென்ற ஒரு விசைப்படகையும் அதிலிருந்து 8 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து கிளிநொச்சி கிராஞ்சி கடற்படை முகாமில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ராமேஸ்வரம் மீனவர்கள் தலைமன்னாருக்கும் இரணைதீவுக்கும் இடையே இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர்,

06

வன்னியின் மூன்று மாவட்டங்களிலும் காணப்படும் காணி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான காணி அமைச்சின் நடமாடும் சேவை காணி அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது.வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, பாராளுமன்ற உறுப்பினர்களான கு.திலீபன், கே.கே.மஸ்தான், செல்வம் அடைக்கலநாதன், காணி அமைச்சின் செயலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	141.83	147.84
கனடியன் டொலர்	153.64	159.49
யூரோ	223.85	232.67
ஜப்பான் யென்	1.7190	1.7840
சிங்கப்பூர் டொலர்	146.13	150.84
ஸ்டேலிங் பவுன்ஸ்	265.27	273.66
சுவிஸ் பிராங்க்	215.03	222.69
அமெரிக்க டொலர்	198.50	202.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	533.10	கட்டார் ரியால்	55.20
குவைத் டினார்	664.02	சவூதி ரியால்	53.51
ஓமான் ரியால்	522.07	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	54.72

தினகரன்

THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 16ம் நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 26

குறள் தரும் சிந்தனை

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று

உற்றார் உறவினர் எனச் சூழ இருப்போருடன் அன்பு கலந்து மகிழ்ந்து பழகுபவனுடைய வாழ்க்கையானது, கரையில்லாத குளத்தில் நீர்நிறைந்ததைப் போலப் பயனற்றதாகிவிடும்.

இலங்கையின் பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தவிருக்கும் யுத்தம்!

உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொண்டு வரும் போர் நேற்று நான்காவது நாளாகத் தொடர்ந்தது. இந்த யுத்தத்தின் விளைவாக உக்ரைன் மிக மோசமான பேரழிவுகளைச் சந்தித்து வருகின்ற அதேநேரம், இப்போரின் தாக்கத்திற்கு உக்ரைன், ரஷ்யா மாத்திரமல்லாமல் உலக நாடுகளும் முகம் கொடுக்கக் கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக உலகப் பொருளாதாரத்தில் இப்போர் அதிக தாக்கம் செலுத்தும் என்பதில் ஐயமில்லை. இதனை உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் மாத்திரமல்லாமல், பொருளாதார நிபுணர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப்போர் ஆரம்பமானதும் மசகு எண்ணெய், எரிவாயு, தங்கம் என்பவற்றின் விலை உலக சந்தையில் பெரிதும் அதிகரித்துள்ளது. ஒரு பரல் மசகு எண்ணெயின் விலை 110 அமெரிக்க டொலர்களுக்கும் மேல் உயர்ந்துள்ளது. பங்குச் சந்தையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இப்போரைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் அமெரிக்காவும் ரஷ்யா மீது விதித்துள்ள பொருளாதார தடைகளும், ரஷ்யா விதித்திருக்கும் தடைகளும் கூட உலகப் பொருளாதாரத்தில் நிச்சயம் தாக்கங்களை ஏற்படுத்தும். அதன் விளைவுகளை உலகில் எல்லா நாடுகளுமே அனுபவிக்க நேரிடும். இந்த யுத்தத்தின் விளைவாக மசகு எண்ணெய், எரிவாயு, தங்கம் என்பவற்றின் விலை உலக சந்தையில் அதிகரிக்கையில், அதன் தாக்கம் பிராந்திய மட்டத்தில் மாத்திரமல்லாமல் எல்லா நாடுகளையும் பாதிக்கவே செய்யும். ஒவ்வொரு நாட்டிலும் அவற்றின் விலைகள் அதிகரிக்கும்.

அந்த வகையில் உக்ரைன் மீதான ரஷ்யப் போரின் தாக்கங்களுக்கு இலங்கையும் முகம் கொடுக்கவே செய்யும். அதனைத் தவிர்க்க இயலாது. இப்போராது இலங்கையின் தேயிலையை இறக்குமதி செய்வதில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ள ரஷ்யாவுக்கும், 2020 ஆம் ஆண்டில் 4.2 மில்லியன் கிலோ கிராம் தேயிலையை இறக்குமதி செய்துள்ள உக்ரைன் நாட்டுக்கும் இடையில் இடம்பெறுகின்றது. அதனால் இந்நாட்டு தேயிலை ஏற்றுமதியில் இப்போர் தாக்கம் செலுத்தக் கூடியதாக இருக்கும் என்று இந்நாட்டு தேயிலை ஏற்றுமதியாளர்கள் அச்சம் தெரிவித்திருக்கின்றார்கள்.

அதேநேரம், கொவிட் 19 தொற்றின் விளைவாக தோற்றம் பெற்றுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள இலங்கையின் உல்லாசப் பயணக் கைத்தொழில் துறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் பரந்த அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப, ரஷ்யா, பெலாரஸ், உக்ரைன் உள்ளிட்ட சோவியத் ரஷ்யாவிலிருந்து பிரிந்த நாடுகளில் இருந்து அதிகளவிலான உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் பயனாகக் கடந்த வருடம் 16 ஆயிரத்து 894 உல்லாசப் பயணிகள் ரஷ்யாவிலிருந்தும், உக்ரைனில் இருந்து 7037 பயணிகளும் இந்நாட்டுக்குள் வருகை தந்துள்ளனர்.

அத்தோடு இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் ரஷ்ய உக்ரைன் போர் ஆரம்பித்த பெப்ரவரி 24 ஆம் திகதி வரையும் ரஷ்யாவிலிருந்து 26 ஆயிரத்து 597 உல்லாசப் பயணிகளும், உக்ரைனில் இருந்து 12 ஆயிரத்து 979 உல்லாசப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அவர்களில் உக்ரைன் நாட்டைச் சேர்ந்த சுமார் 4,000 உல்லாசப் பயணிகள் தற்போது நாட்டில் உள்ளனர்.

ரஷ்ய, உக்ரைன் நாடுகளின் உல்லாசப் பயணிகள், இலங்கைக்கு வருகை தருவதில் ஏற்பட்டு வரும் அதிகரிப்பு

இந்நாட்டின் உல்லாசப் பயணக் கைத்தொழில் துறைக்கு நம்பிக்கை அளிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் இந்த இரு நாடுகளும் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பது இந்நம்பிக்கையின் எதிர்காலம் குறித்த ஐயத்தைத் தோற்றுவித்திருக்கின்றது. இப்போர் தொடங்கியதும் உக்ரைனின் ஆகாய மார்க்கம் விமானப் பயணத்திற்காக மூடப்பட்டுள்ளதோடு விமானப் போக்குவரத்து சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக இலங்கைக்கு வருகை தருவதற்கு ஏற்கனவே திட்மிட்டுள்ள உல்லாசப் பயணிகளின் வருகையிலும் இப்போர் பெரும் தடைக்கல்லாக அமைந்துள்ளது.

ஆகவே உக்ரைன் மீது ரஷ்யா முன்னெடுக்கும் போரும் அதன் விளைவாக சர்வதேச மட்டத்தில் உருவாகியுள்ள நிலைமைகளும் இலங்கைப் பொருளாதாரத்திலும் பொருளாதார நலன்களிலும் நிச்சயம் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தவே செய்யும். கொவிட் 19 தொற்றின் விளைவான பொருளாதார நெருக்கடிக்கு ஏற்கனவே முகம் கொடுத்துள்ள இந்நாட்டுக்கு ரஷ்ய உக்ரைன் யுத்தத்தின் விளைவான தாக்கங்கள் மேலதிக அழுத்தங்களாகவே அமையும். அதனால் நாடு முகம் கொடுத்துள்ள சவால்களை கருத்தில் கொண்டு செயற்படுவதற்கான பொறுப்பு ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ளது என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

மகாசிவராத்திரியை முன்னிட்டு நாளை உலக சைவ பேரவையின் கொடிதினம்

நாளை (01.03.2022) மகா சிவராத்திரி தினம் ஆகும். சிவனுக்குரிய இராத்திரியாகப் போற்றப்படும் இந்நாள், சிவசிந்தனையுடன் புனிதமாக அனுஷ்டிக்கப்பட வேண்டிய உன்னத விரததினமாகும். சிவனுக்குரிய வாகனமும், கொடியும் இடபம் எனப்படும் நந்தியாகும். சிவசின்னமாகவும் பெருமை பெறும் நந்திக் கொடியின் முக்கியத்துவத்தை சிவராத்திரி நாளன்று உலகளாவிய ரீதியில் இந்து மக்களுக்கு உணர்த்தும் வகையில் கடந்த பல வருடங்களாகவே உலக சைவப் பேரவை செயற்பட்டு வருகிறது.

அந்த வகையில் வழமை போல இந்த வருடமும் மகா சிவராத்திரி தினமாகிய நாளை நாடளாவிய ரீதியில் சைவக் கொடி தினத்தை அனுஷ்டிப்பதற்கு உலக சைவப் பேரவை ஏற்பாடு செய்துள்ளது. கொழும்பு மாவட்டத்திற்கான வைபவம் உலக சைவப் பேரவையின் இலங்கை கிளைத் தலைவர் கா. தயாபரன் தலைமையில் கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் நாளை காலை 8.00 மணிமுதல் இடம்பெறவிருக்கிறது. இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கொடி விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார்.

அறநெறி பாடசாலைகளின் அபிவிருத்தி, அங்கவீனமுற்றவர்கள் மற்றும் வறியவர்களுக்கான மனிதாபிமான உதவிகளுக்காக நிதியுதவி வழங்குமாறு இந்து மக்களிடம் உலக சைவப் பேரவை வேண்டுகோள்

பிரதமரின் இந்துமத விவகாரங்களுக்கான இணைப்பாளர் இராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன், மாணிக்கப்பிள்ளையார் ஆலய அறங்காவல் சபை தலைவர் அ. மாணிக்கவாசகர், உலக சைவப் பேரவை உட்பட ஏனைய இந்துமத அமைப்புகளினதும் உறுப்பினர்கள் மற்றும் சைவ அடியார்கள் என்போர் கலந்து சிறப்பிக்கவிருக்கிறார்கள். கொடிதினம் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொண்டு வரும் உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை உப தலைவர் விடைக்கொடிச்செல்வர் கலாநிதி சின்னத்துரை தனபாலா தகவல் தருகையில், 'மேல் மாகாணம், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உட்பட நாடளாவிய ரீதியில் இந்து மக்கள் பெருமளவில் வாழும் பகுதிகளில் சைவக் கொடிதினம் நடத்தப்படுகிறது. சைவப் பேரவைத் தொண்டர்கள் இல்லங்களுக்கு வருகை தந்து கொடியினை வழங்கும் போது, அதனைப் பெற்றுக் கொள்ளும் இந்து மக்கள் அனைவரும் தாராள மனதுடன் நிதி அன்பளிப்புச் செய்வதன் மூலம், புனித சிவராத்திரி தினத்தன்று நற்பணிகளுக்கு உதவிய பெரும் பேற்றைப் பெறுவதாக இருக்கும். இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பை உலக சைவப் பேரவை எதிர்பார்க்கிறது' எனத் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதியானது, அந்தந்த மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும், விழிப்புலன், செவிப்புலன் அற்றவர்கள் மற்றும் அங்கவீனமுற்றவர்களுக்கான மனிதாபிமான செயற்திட்டங்களுக்கும், பலவகையிலும் பாதிக்கப்பட்டு வசதி குறைந்த நிலையில் வாழும் இந்து மக்களின் வாழ்வாதார உதவிகளுக்கும் பயன்படுத்தப்படுவது வழக்கமாகும். தற்போது நாடளாவிய ரீதியில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கொடிதின நிகழ்ச்சிகள் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய நடத்தப்படவிருக்கின்றன.

சிவராத்திரி நாளன்று இந்து மக்கள் அனைவரும் தங்கள் இல்லங்களிலும், ஆலயங்கள், இந்துமத நிறுவனங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளிலும் நந்திக் கொடிகளை ஏற்றி வைத்து சைவ விழிப்புணர்வை வெளிப்படுத்துவதுடன் கொடிதினத்தையும் முக்கியத்துவப்படுத்த வேண்டும் என உலக சைவப் பேரவை சார்பாக இலங்கை வாழ் அனைத்து இந்து மக்களையும் கேட்டுக் கொள்வதாக கலாநிதி சின்னத்துரை தனபாலா தெரிவித்துள்ளார்.

அ. கனகசூரியர்...

நேர்மைக்கு இலக்கணமாகத் திகழ்ந்த மக்கள் பணியாளன் அமரர் ஜெயராம்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற அமரர் சாமித்தம்பி ஜெயராம் (வயது 85) அவர்களின் நினைவஞ்சலி வைபவம் மட்டக்களப்பு சிவில் சமூகத்தின் தலைவரும், கிழக்கு மாகாணசபையின் முன்னாள் செயலாளருமான எஸ். மாமாங்கராஜா தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு மாநகர பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மண்ணை நேசித்து வாழ்ந்த அவர் தனது மரணத்தின் பின்னர் உடலை கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரிக்கு வழங்கியிருந்தார். அவர் தனது 85 ஆவது வயதில் 27.01.2022 அன்று காலமானார்.

எளிமையான வாழ்க்கை முறையும், உயர்ந்த சிந்தனைகளும் கொண்டு பெரும் சேவையாற்றியவர் அவர். அன்னாரின் உருவப்படத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தியதுடன், ராஜினி புண்ணியமூர்த்தி, ரஞ்சனி சிவஞானம் ஆகியோர் நினைவுச்சுடர் ஏற்றினர். மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், இலக்கிய ஆர்வலர் காசுபதி நடராஜா ஆகியோர் இந்நிகழ்வை நடத்துவதற்குக் காரணமாக இருந்தனர்.

குறுமண்வெளி கிராமத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு பார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அமரர் ஜெயராம் நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேரமுகாமைத்துவம் என்பவற்றைக் கடைப்பிடித்து அரச சேவைக்கு பெருமை சேர்த்தார்.

மட்டக்களப்பு மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கல்விக்காக அன்னாரது விருப்பத்திற்கிணங்க, அவரது உடல் வைத்தியர்கள் முன்னிலையில் கையளிக்கப்பட்டது. அமரர் ஜெயராம் மதுரை பல்கலைக்கழகத்தில் விலங்கியல் விசேட பட்டம் பெற்று, 1977 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட ஒரு வருட பயிற்சியாளராக தெரிவு செய்யப்பட்டு பின்பு கலாசார உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார். அப்போது அவராகவே திட்டமிடல் பிரிவைக் கோரி உதவிப் பணிப்பாளராக நியமனம் பெற்றார். பின்பு பிரதிப் பணிப்பாளராக மற்றும் பணிப்பாளராக கடமையாற்றி தனது 55 வயதில் இழைப்பாறினார். அதன் பின்னர் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவைக்கு நியமிக்கப்பட்டார்.

வாழைச்சேனை காகித ஆலையின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், கிழக்குப் பல்கலைக்கழக மூதவைக் குழு உறுப்பினராகவும் கடமையாற்றினார். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வன்செயல்கள், அனர்த்தங்கள், இடம்பெயர்வு மற்றும் மீள்குடியேற்றக் காலங்களில் பாரிய பங்களிப்பைச் செய்தவர் அவர். இன்னலுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பெரிதும் உழைத்தார். அச்சுறுத்தல் நிலவிய காலத்தில் மானிட செயற்பாடு, சூழல் மாசடைதல், விலங்கு வேளாண்மை, நெற் செய்கை போன்ற துறைகளில் அதிக ஈடுபாடு காட்டினார்.

மனித குலத்திற்குத் தேவையான மிக உயர்ந்த பண்பாகிய நேர்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தார். 1995 இல் பாதிக்கப்பட்ட மற்றும் அடிப்படைத் தேவைகளற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 'ஏடு' எனும் அமைப்பில் இணைந்து அவர்களது கல்வியின் எழுச்சிக்கு உரமிட்டார். மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். நேர்மையாகவும், துணிச்சலாகவும் தனது கருத்துகளை ஆணித்தரமாக எவரிடமும் முன்வைப்பது அவரது சுபாவம் ஆகும். அரச உயர்மட்டம் வரை சென்று மக்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடிய ஆளுமைத்திறன் அவரிடம் காணப்பட்டது. இதற்கு அவரிடம் காணப்பட்ட ஆங்கில மொழிப் புலமையும் ஒரு காரணமாகும்.

கொள்கைவாதியாக தனது வாழ்வுக் காலத்தில் வையத்துள் வாழும் நெறிமுறைகளைக் கையாண்டதோடு, தனது பதவிக் காலத்தில் நேர்த்தியாக, அன்பாக நேரமுகாமைத்தவத்துடன் சேவைகளைச் செய்துள்ளார். ஏனைய உத்தியோகத்தர்களை சரியாக வழிநடத்தி சமூக சேவைகள் செய்யக் கூடியவர்களாக அவர்களைப் புடம் போட்டவர் ஜெயராம்.

மண்டூர் முருகன் ஆலயத்தின் 16 ஆம் நாள் திருவிழாவின் போது, அதற்கான மாலை கட்டும் பணியை முன்னின்று செயற்படுத்துவதில் நாட்டம் கொண்டவராகவும், சிலிங்க வழிபாட்டில் பற்றுக் கொண்டவராகவும் வாழ்ந்தவர் அவர். மட்டக்களப்புபிரமகுமாரிகள் இராஜயோக நிலையத்தில் இணைந்து ஆன்மிகம் பரப்பும் பணியில் ஈடுபட்டார். அமரர் ஜெயராம் மறைந்தும் மறையாத ஒரு மனிதராக மக்கள் மத்தியில் வாழ்கின்றார்.

சிவம் பாக்கியநாதன்
மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்

உக்ரைனில் இருந்து பாதுகாப்பாக நேற்று புதுடில்லி வந்து சேர்ந்த 250 இந்தியர்கள்

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததையடுத்து அங்கு அகப்பட்டுக் கொண்ட இந்தியப் பிரஜைகளில் ஒரு தொகுதியினர் நேற்றுக் காலை பாதுகாப்பாக புதுடில்லியை வந்தடைந்தனர். இவர்களில் பெருமளவானோர் உக்ரைனில் கற்கின்ற மாணவர்களாவர். எயார் இந்தியா விமானமொன்றில் அவர்கள் புதுடில்லிக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

உக்ரைனில் அயல்நாடான ரூமேனியாவின் தலைநகரில் தஞ்சமடைந்திருந்த சுமார் 250 இந்தியப் பிரஜைகள் இவ்விதம் நேற்று பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டிருந்தனர். இவர்களில் ஒருவரான மகாராஷ்டிராவின் சோலாப்பூரைச் சேர்ந்த சூர்யா சுபாஷ் என்பவர் கூறுகையில் " உக்ரைன் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. மக்கள் அகப்பட்டுக் கொண்டுள்ளனர்" என்று கவலையுடன் குறிப்பிட்டார்.

பெருமளவானோர் மாணவர்கள்; கல்வி தடைப்பட்டதால் தங்களது எதிர்காலம் குறித்து அதிக வேதனை

இவ்விதம் அழைத்து வரப்பட்ட மாணவர்கள் தங்களது எதிர்காலம் பற்றிய கவலையை அதிகம் வெளிப்படுத்தினர். இவர்கள் உக்ரைனில் பல்கலைக்கழகக் கல்வியை கற்று வருகின்றனர். உக்ரைன் ஆக்கிரமிக்கப்பட்டதனால் தங்களது கல்வி என்னவாகுமென்ற கவலையில் அவர்கள் உள்ளனர். உக்ரைனின் புக்கே காவீனியன் அரச பல்கலைக்கழகத்தின் 5 ஆம் வருட மருத்துவ (எம்.பி.பி.எஸ்) மாணவரான விபின் என்பவர் குறிப்பிடுகையில், உக்ரைனில் இருந்து எல்லைப் பகுதிக்கு இடம்பெயர்ந்து வந்த தாங்கள் விதிமுறைகளைப் பூர்த்தி செய்து கொண்டு அயல்நாட்டுக்குள் நுழைவதற்காக சுமார் 12 மணி நேரம் காத்திருந்ததாகக் கூறினார்.

கேரளாவின் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் விபரிக்கையில், தாங்கள் 5 கி.மீ தூரம் கடுமையான வாகன நெருக்கடியைத் தாண்டி எல்லைப் புறத்துக்கு வந்து சேர்ந்ததாகக் குறிப்பிட்டார்.

மகாராஷ்டிரா, ஆந்திரபிரதேஷ், குஜராத், உத்தரபிரதேஷ், பீஹார், அருணாச்சல பிரதேஷ், கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் விமானத்தில் நேற்றுக் காலை வந்து சேர்ந்தோரில் அடங்கியிருந்தனர். உக்ரைனில் அகப்பட்டுக் கொண்ட தங்களை பாதுகாப்பாக மீட்டு வருவதில் இந்திய அரசு காண்பித்த அக்கறைக்கு அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர். "உக்ரைன் நிலைமை ஆபத்தாக உள்ளது. எங்கள் எதிர்கால கல்வி குறித்து நாங்கள் அதிகம் கவலைப்படுகின்றோம். ஆனால் நாம் திரும்பி வந்தது அதிர்ஷ்டம்" என்று மற்றொரு மாணவர் தெரிவித்தார்.

இதேவேளை உக்ரைனில் சுமார் 16 ஆயிரம் இந்தியர்கள் அகப்பட்டுக் கொண்டுள்ளதாகவும், அவர்களில் பெரும்பாலானோர் மாணவர்கள் என்றும் இந்திய வெளியுறவுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

"எயார் இந்தியா விமான நிறுவனம் எங்களுக்கு பெரிதும் உதவுகின்றது. உக்ரைனில் உள்ள இந்திய தூதரகம் முழுமையான ஒத்துழைப்பு வழங்குகின்ற" என்று இந்தியா திரும்பிய மாணவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இதற்கு முன்னதாக 219 இந்தியர்கள் உக்ரைனில் இருந்து பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது

தேற்றாத்தீவு கொம்புச்சந்திப் பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரி

பக்தர்களுக்கு தங்கள் கைகளினால் அபிஷேகம் செய்ய வாய்ப்பு

தேற்றாத்தீவு கொம்புச்சந்திப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை (01) மஹா சிவராத்திரி விரத சிறப்பு நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற உள்ளன. கொம்புச்சந்திப் பிள்ளையார் ஆலயத்திற்கு சித்தர்களால் நர்மதா நதிக்கரையில் இருந்து கொண்டு வரப்பட்டு பிரதிஸ்டை பண்ணப்பட்டிருக்கும் உயிர் லிங்கத்திற்கு அடியார்கள் ஆலய புனித கங்கையாகிய பாலாறு 'பால புஸ்கரணி' தீர்த்தக்கங்கையில் தீர்த்த நீர் எடுத்துவந்து தங்கள் கைகளினால் அபிஷேகம் பண்ணும் சிறப்பு நிகழ்வு அன்றைய தினம் அதிகாலை தொடக்கம் பின்னிரவு வரை இடம் பெறும்.

இதன் போது தங்களது ராசிகளுக்குரிய அபிஷேக திரவியங்களாலும் அபிஷேகம் பண்ணுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் மேஷ ராசி வெல்லம் கலந்த நீர், ரிஷப ராசி தயிர், மிதுன ராசி கரும்பு, கடகராசி சர்க்கரை சேர்ந்த பால், சிம்ம ராசி கன்னி ராசி பால் அல்லது நீரால், துலாம் ராசி பசும்பால், விருச்சக ராசி தேன் அல்லது சர்க்கரை கலந்த நீரால், தனுசு ராசி குங்குமப்பூ கலந்த பால், மகர ராசி நல்லெண்ணெய், கும்ப ராசி இளநீர் அல்லது கடுகு எண்ணெய், மீனராசி குங்குமப்பூ பால் கொண்டு அபிஷேகம் பண்ணக் கூடிய வாய்ப்புள்ளது

ஆலயத்தில் நான்கு சாமப் பூஜைகளும் லிங்கோற்பவர் காலத்தில் ஏகாதசி ருத்ர மஹா வேள்வியும் இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயம். மாலை 6 மணி தொடக்கம் அதிகாலை வரை பஜனை, சங்கீதக் கச்சேரி, நடனம் கதாப்பிரசங்கம், சமய பேருரைகள் என்பன இடம் பெறும் என ஆலய பரிபாலன சபையின் தலைவர் த.விமலானந்தராஜா தெரிவித்தார்.

மானுடவியல் (தொடர்)

கண்ணப்ப நாயனார்

62

சுவாமியைப் பிரிந்து சிறிது தூரம் சொன்றார் கன்றைவிட்டுப் பிரிகின்ற தலையீற்றுப் பசுப் போலஅவரிடத்திற்குத்திரும்பி வருவார் கட்டி அணைத்துக் கொள்வார்; மீளப்போவார்; சிறிதுதூரம் போய் அத்தியந்த ஆசையோடு சுவாமியைத் திரும்பிப் பார்த்து நிற்பார். "சுவாமீ! நீர் உண்பதற்கு மிருதுவாகிய நல்ல இறைச்சியை நானே குற்றமறத் தெரிந்து கொண்டு வருவேன்" என்றார்.

"நீர் யாதொரு துணையுமின்றி இங்கே தனியே இருக்கிறபடியால் நான் உம்மைப் பிரியமாட்டேன். உமக்குப் பசி மிகுந்தபடியால் இங்கே நிற்கவுமாட்டேன். ஐயையோ! நான் யாது செய்வேன்" என்று சொல்லிக் கொண்டு கண்ணீர் இடைவிடாது பொழிய நின்றார்.

பின்பு ஒரு பிரகாரம் போய் வரத்துணிந்து, வில்லை எடுத்துக் கொண்டு, கையினாலே கும்பிட்டு, சுவாமி சந்நிதானத்தை அருமையாக நீங்கி, மலையினின்றும் இறங்கி நாணன்பின்னே வர, பிறவிஷயங்களிலே உண்டாகும் ஆசை பரமாணுப் பிரமாணமாயினும் இன்றி, அன்புமயமாகி, பொன் முதலியாற்றைக் கடந்து கரை ஏறி, அங்குள்ள சோலையிலே புக; அதுகண்டு காடன் எதிரேபோய்க் கும்பிட்டு,

"நெருப்புக் கடைந்து வைத்திருக்கின்றேன். பன்றியின் அவயவங்களெல்லாவற்றையும் உம்முடைய அடையாளப்படி பார்த்துக்கொள்ளும். திரும்பிப் போதற்கு வெகுநேரம் சென்று போயிற்று. நீர் இவ்வளவு நேரமும் தாழ்த்தது ஏன்" என்றான்.

நாணன் அதைக் கேட்டு "இவர் மலையிலே சுவாமியைக் கண்டு அவரைத் தழுவிக்கொண்டு மரப்பொந்தைப் பற்றி விடாத உடும்பைப்போல அவரை நீங்கமாட்டாதவராய் நின்றார். (தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

உடப்பு , ஆண்டிமுனை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய மாசி மக உற்சவ தீர்த்தோற்சவம் காளியம்மன் கடற்கரை சமுத்திரத்தில் அண்மையில் இடம்பெற்றது. (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

அறநெறி அறிவுநொடி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

18896) கோவில் மணிகள் சாதாரண உலோகத்தில் செய்யப்படுபவையா? இல்லை

18897) கோவில் மணிகள் எந்த உலோகங்களில் செய்யப்படுபவை?

காட்மியம், ஜின்க், லெட், காப்பர், நிக்கல், க்ரோமியம் மற்றும் மாங்கனீஸ் போன்ற பல உலோகங்களைக் கொண்டு செய்யப்படுபவை.

18898) ஒவ்வொரு உலோகத்தையும் கலப்பதால் உள்ள நன்மை என்ன?

கோவில் மணியை செய்ய ஒவ்வொரு உலோகத்தையும் சரியான அளவில் கலக்க வேண்டும். மணியை ஒலிக்கச் செய்யும் போது ஒவ்வொரு உலோகமும் ஒவ்வொரு தனித்துவமான ஒலியாய் எழுப்பும்.

18899) இதனால் மனிதனுக்கு ஏற்படும் நன்மை என்ன?

இது மனிதனது இடது மற்றும் வலது மூளையை இணைக்கச் செய்யும். அதனால் மணி அடித்த அடுத்த தருணமே, நீண்ட நேரம் ஒலிக்கும் கூர்மையான சத்தம் எழும். இது 7 நொடிகள் வரை நீடிக்கும். மணியில் இருந்து எழும் எதிரொலி உங்கள் உடலில் உள்ள 7 குணமாதல் மையங்களையும் (சக்கரங்கள்) தொடும். அதனால் மணி ஒலித்த உடனேயே, உங்கள் மூளை சில வினாடிகளுக்கு வெறுமையாகி விடும். அப்போது மெய்மறதி நிலையை அடைவீர்கள். இந்த மெய்மறதி நிலையில், உங்கள் மூளை சொல்வதை வரவேற்கும் பண்பை பெறும்.

18900) பொதுவாக அரச மரத்தை எப்படி மரமாக பார்க்கின்றனர்?

பயனற்ற மரமாக பார்க்கின்றனர்.

18901) இது ஏன்?

அதனால் எந்த ஒரு கனியோ அல்லது திடமான மரமோ கிடைப்பதில்லை என்பதால் ஆகும்.

18902) அரச மரத்திற்குரிய சிறப்பு என்ன? இரவு நேரத்தில் ஒட்சிசன் உண்டாக்கும் சில மரங்களில் அரச மரமும் ஒன்று.

18903) அதனால், இந்த மரத்தை பாதுகாப்பாக வைத்திட என்ன செய்கின்றார்கள்?

அதை புனித மரமாக கருதுகின்றனர்.

18904) உணவருந்திய பிறகு இனிப்புகள் உண்ண பரிந்துரைக்கப்படுவது ஏன்?

காரசாரமான பதார்த்தங்களோடு ஆரம்பிக்கும் உணவு, இனிப்பு பண்டங்களுடன் முடிவடையும். அதற்கு காரணம் செரிமான அமைப்பு மற்றும் அமிலங்களை செயல்படுத்த செய்வது காரசாரமான உணவுகள். இந்த செயற்பாட்டை குறைத்திடும் இனிப்புகள். அதனால் தான்.

18905) மணப்பெண்ணின் கைகளிலும் கால்களிலும் மருதாணி தடவப்படுவது ஏன்? மருதாணி என்பது சக்தி வாய்ந்த மருத்துவ மூலிகையாகும். திருமணங்கள் என்பது அழுத்தத்தை உண்டாக்கும், குறிப்பாக மணப்பெண்ணுக்கு. மருதாணி தடவிக் கொண்டால், நரம்புகளை குளிரச் செய்யும். அதற்கு காரணம் குளிரச் செய்யும் குணங்களை கொண்டுள்ளது மருதாணி. அதனால் தான்.

மத்திய கொழும்பு இந்து வித்தியாலய

சிவராத்திரி விழா

மத்திய கொழும்பு இந்து வித்தியாலய இந்து சங்கமும் தந்தை செல்வா நற்பணி மன்றமும் இணைந்து வருடாந்தம் நடத்தும் மகா சிவராத்திரி நிகழ்வு மத்திய கொழும்பு இந்து வித்தியாலயத்தின் அதிபர் பத்மரஞ்சன் தலைமையில் எதிர்வரும் 01.03.2022 ஆம் திகதி பி.ப.4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் தந்தை செல்வா அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் 306பி2 முன்னாள் ஆளுனர் டாக்டர் ராமஜெயம் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிப்பதோடு, அறநெறி பாடசாலை ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை தந்தை செல்வாநற்பணி மன்ற பொதுச் செயலாளர் எஸ். கே. தளையரட்ணமும், நிர்வாகச் செயலாளர் திருமதி புவனேஸ்வரியும் மேற்கொண்டு வருகினறனர்.

ஆண்டிமுனையில் சிவராத்திரி விழா

புத்தளம் மாவட்டம் உடப்பூரின் வடமேற்கே ஆண்டிமுனை சின்னக்கொலனி சமுத்திரக்கரையில் தாழை மரங்களால் சூழப்பெற்று வீற்றிருந்து சகல வளங்களும் நிறைந்து சகல மக்களினதும் இன்னல்களைத் தீர்த்து அருள் புரியும் அன்னை ஸ்ரீ கருமுத்துமாரியம்மன் அம்பிகைக்கு நிகழும் மங்களகரமான பிலவ வருடம் மாசிமாதம் 16ம் நாள் (28.02.2022) காலை 9.00 மணிக்கு விநாயகர் வழிபாடு கணபதி ஹோமம், வாஸ்து சாந்தி என்பன நடத்தப்படும். பக்தர்கள் கரங்களினால் மஞ்சள் நீரால் உற்சவ அம்பாளுக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விஷேட பூசையும், மகேசுவர பூசையும் நடாத்தப்பட்டு மாலை 5.00 மணிக்கு விஷேட பூசையும், இரவு வீதி ஊர்வலமும் நடத்தப்படும்.

நாளை (01.03.2022) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அம்பாளுக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகமும், இரவு 7.00 மணிக்கு விஷேட பூசையும் அம்பாள் சமுத்திரத்தில் வலம் வருதல் எனும் தெற்போற்சவம் நடத்தப்படும்.

உடப்பிலுள்ள சகல ஆலயங்களிலும் நான்கு சாம விஷேட பூசைகளும், ஸ்ரீபார்த்தசாரதி ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலய முற்றவெளியில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று 02.03.2022 காலை 8.30 மணிக்கு சமுத்திரத்தில் தீர்தோற்சவமும் மகேசுவர பூசையும் நடைபெற்று, இரவு ஆலய முற்றவெளியில் பொங்கலும், 03.03.2022 அன்று மாலை 6.30 மணிக்கு வைரவர் மடை பூசையும் நடத்தப்படும்.

கலாவிபூஷணம்
சிவத்திரு பா.முருகானந்தன்,
உடப்பு.

நாதப் பிரம்ம யோகம் - 08

ஸ்வரங்களின் ஆரோகணமும் அவரோகணமும் சிலகுறியீடுகளால் குறிக்கப்பட்டு இறுதியாக அட்சரங்களாகவும், உயிர் எழுத்துக்களாகவும் மாற்றப்படும். இதன் மூல பல ஸ்வரங்களை மாற்றி மாற்றி அமைத்து அதன் மூலம் எழுப்பப் படும் இசையினால் பலவித உணர்ச்சிகள், எண்ணங்கள் அல்லது மாறுபட்ட உணர்ச்சிகளை மனதில் எழுப்ப முடியும். இப்படித்தான் ஒருவனின் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் மொழிகள் உருவாகின்றன.

இசை என்பது காதல், மகிழ்ச்சி போன்ற நல்ல உணர்ச்சிகளினை உருவாக்கும் ஒன்று மாத்திரமல்ல, அனைத்து விதமான உணர்ச்சிகளையும் உருவாக்க கூடியது. இந்தப் பணியை மனித குலத்தில் மொழி தோன்றுவதற்குப் பல காலத்திற்கு முன்னரே இசை செய்து வருகிறது. ஒரு சிறு பெண் இயல்பாக அழுவதும் கூட ஒருவித இசையே. ஆபிரிக்கப் பழங்குடியினர் சிலர் உத்வேகமாக சிலதைச் சொல்ல வேண்டும் என்றால் இசையாக தமது சொற்களைச் சொல்வதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள். மொழி விருத்தியடைவதற்கு முன்னர் மனித குலத்தின் ஒரே தொடர்பாடல் ஊடகம் இசையே. மொழி விருத்தியடைய அதன் பழைய முறையான இசை தனது பிரபலத்தை இழக்கத் தொடங்கியது. எனினும் இன்றும் இசை கூட்டாக சந்தோஷத்தை அனுபவிக்க, இசை ஒரு ஊடகமாக பாவிக்கப்படுகிறது. தகுந்த இசைபோரின் போது படை வீரர்களின் உத்வேகத்தைபோர்க் காலங்களில் அதிகரிக்கப் பயன்படுகிறது. இதுவே இராணுவத்தில் நடனம், நாட்டுப்புறப் பாடல்கள், இசைக் குழு என்பவை இருப்பதற்குக் காரணம். மனித குலத்தின் வரலாற்றில் சந்தோஷம், போர் என்பவற்றின் மிக முக்கியமான ஒன்றாக இசை இருந்திருக்கிறது.

இசை விழாக்களில் பாடகரோ, இசைக் கலைஞரோ பார்வையாளர்களுக்கு செய்தியைச் சொல்ல, உணர்ச்சிகளில் மாற்றத்தை ஏற்படுத்த, தீவிர மகிழ்ச்சியை ஏற்படுத்த முடிவதை அவதானிக்கலாம். இதைச் செய்வதற்கு அவர் தனது ஸ்வரத்தை, வீச்சினை, வேகத்தினை, தாளத்தினை தனது இசையில் செய்வதை நாம் அவதானிக்கலாம். ஒரே சுருதியில் நடைபெறும் இசை சோர்வினையும், எந்த உணர்ச்சிகளையும் தூண்டமுடியாதஒன்றாகவே இருக்கும். இது இசையின் இயல்பினைக் குறைக்கும். பொதுவான உரையடலில் குரலை உயர்த்தி, தாழ்த்திப் பேசுவதன் மூலம் சாதாரண உரையாடலை சுவாரசியமாகவும், அர்த்தமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் மாற்றமுடியும் என்பதைபலரும் அனுபவத்தில் அறிந்திருப்பார்கள்.

எவரொருவரும் விரிவுரையின் போது தனது குரலின் சுருதியையும், ஒலியின் அளவினையும் கூட்டிக் குறைக்காமல் சுவாரசியமான உரையினைத் தரமுடியாது. ஆகவே சாதாரண உரையாடலின் வினைத்திறனான வெளிப்பாட்டிற்கு ஸ்வரம் அவசியமாகிறது. இதன் அர்த்தம் என்னவென்றால் உணர்ச்சிகளினதும், எண்ணங்களினதும் அலைகள் ஸ்வரத்தின் அடிப்படியிலேயே இயங்குகின்றது என்பதே.

(தொடரும்)

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

நாவலப்பிட்டி நகரில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான மாசிமக மஹோற்சவ தேர்த்திருவிழா இம்முறை உள் வீதியில் இடம்பெற்றது. (படம்: டி.வசந்தகுமார் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

தகவல் தெரிந்து நான் ....

விட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன மறுத்துள்ளார். சு.க பொலன்னறுவை மாவட்ட மாநாடு சு.க தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று நடைபெற்றது. இங்கு உரையாற்றிய அவர், மருத்துவ சிகிச்சைக்காகவே சிங்கப்பூர் சென்றேன். ஆஸ்பத்திரியில் இருக்கையில் எனக்கு தொலைபேசி அழைப்பு வந்ததாக குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால் எலிசபத் ஆஸ்பத்திரிக்குள் தொலைபேசி பாவிக்க முடியாது. எனக்கு எந்த அழைப்பும் வரவில்லை. நான் நியமித்த ஆணைக்குழு விசாரணையிலும் நான் இதனை தெரிவித்தேன். என்னை யாரும் அறிவூட்டவில்லை. எந்த தகவலாவது கிடைத்திருந்தால் ஊரடங்கு அமுல்படுத்தி அதனை தடுத்திருப்பேன். குண்டு வெடித்த 2019 ஜனவரி மாதம் தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தில் சஹ்ரானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது குறித்து வினவியிருந்தேன். புலனாய்வு அதிகாரிகள்,பொலிஸார் உட்பட பலரும் கலந்து கொண்டார்கள். என்மீதான குற்றச்சாட்டு தொடர்பில் கவலையடைகிறேன். நான் உண்மையான பௌத்தன். எனக்கு குண்டுவெடிப்பு தொடர்பில் எவரும் அறிவிக்கவில்லை என்றார்.

தனியார் பஸ் சேவைகளை...

அதற்கிணங்க மிக அவசியமான நேரங்களில் மாத்திரம் போதியளவு பஸ் சேவையை மேற்கொள்ளவுள்ளதாகவும் ஏனைய பஸ் சேவைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். குறிப்பாக அலுவலக நேரத்தை கவனத்திற்கொண்டு அதற்கான காலஅட்டவணை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பஸ்களில் மக்களை கொண்டுசெல்லும் போது செல்லவேண்டிய இடம் முடியும்வரை தேவைப்படும் எரிபொருள் இல்லையாயின் அவ்வாறான பஸ் சேவைகளை முன்னெடுக்கக்கூடாது என்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஏற்கனவே நிபந்தனைகளை விதித்திருந்ததுடன் நாட்டில் தற்போது நிலைவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக அந்த நிபந்தனையை தற்காலிகமாக தளர்த்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க பஸ் வண்டியொன்றுக்கு போதுமான எரிபொருள் உடனேயே குறித்த பயணம் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் இடைநடுவில் அதற்கான எரிபொருளை பெற நேரிட்டால் அந்த பஸ் வண்டிக்கான போக்குவரத்து அனுமதி ரத்துச் செய்யப்படுமென நடைமுறையிலுள்ள ஆணைக்குழுவின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தற்போது நாட்டில் நிலவும் டீசல் தட்டுப்பாடு காரணமாக குறித்த பஸ்கள் இடைநடுவில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ஸ)

மின் துண்டிப்பு...

துண்டிப்பைத் தொடர நேரிடும் என்றும் மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நீர் மின் உற்பத்தி பிரதேசங்களில் காணப்படும் நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு மிகவும் குறைந்து காணப்படுவதாகவும் அந்தப் பகுதிகளில் தற்போது உள்ள நீர் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கே மின் உற்பத்தியை மேற்கொள்வதற்கு போதுமானதாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க மீண்டும் மழை வீழ்ச்சி ஏற்பட்டு மேற்படி நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு மட்டம் அதிகரிக்கும் வரை தொடர்ச்சியாக மின்வெட்டை அமுல்படுத்த வேண்டி ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மேற்படி பகுதிகளில் தற்போது எதிர்பார்க்கும் மழை வீழ்ச்சியை பெற்றுக்கொள்ள முடியாது என்றும் எதிர்வரும் மே மாதம் அளவிலேயே மழை வீழ்ச்சியை எதிர்பார்க்கலாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடைக்கிடை சிறு அளவில் மழை வீழ்ச்சி ஏற்படும் என்றும் எனினும் அது மேற்படி நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிப்பதற்கு போதாது என்றும் அந்த திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ஸ)

வேலைநாட்களை நான்கு...

அதற்கிணங்க, காலை 7.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை வேலை நேரத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் அந்த யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிறுவனங்களிலிருந்து வேலைசெய்யும் பணியாளர் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை தமது பணிகளை மேற்கொண்டு நேரகாலத்தோடு வீடுகளுக்குச் செல்ல சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று மத்திய வங்கி குறித்த யோசனையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை, தனியார் வாகன உபயோகத்தை குறைத்து பொது போக்குவரத்துக்களை முடிந்தளவு உபயோகப்படுத்துமாறு அதன் மூலம் மத்திய வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

அத்துடன் நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் எரிபொருள் பரிமாற்றத்தை குறைத்துக்கொள்ளும் வகையில் மக்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்குமாறு ஊடகங்களுக்கூடாக பாரிய பிரசாரங்களை முன்னெடுப்பது அவசியமென்றும் அந்த யோசனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. டொலர் தட்டுப்பாட்டின் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியை கவனத்திற்கொண்டு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதை தவிர்த்துக்கொள்ளும் வகையில் பல்வேறு யோசனைகள் அடங்கிய பத்திரமொன்றை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அரசாங்கத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் போது மத்திய வங்கியின் ஆளுநரினால் மேற்படி யோசனை அரசாங்கததிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஒன்று கூடல்...

அதிகமாகுள்ளதாக அதன் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

புள்ளிவிபர ரீதியாக கொவிட் தொற்று தொடர்பில் சரியான தகவல்கள் கிடைக்கப்படாத போதிலும், இலங்கையில் கொவிட் பரவல் மிக அதிகமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாலைத்தீவில்...

தேசிய பாடசாலையில் கல்வி கற்ற இவர், பாடசாலை காலத்தில் மத்திய களத்தில் (CD) தடுப்பாட்ட நுட்பத்துடன் விளையாடும் சிறந்த வீரராக இருந்தார்.

இலங்கை அணியின் தேசிய அணியில் இடம் பிடித்த இவர், கால்பந்து உலக கிண்ண கோப்பைக்கான (FIFA World Cup) தகுதிகாண் போட்டியில் இலங்கை தேசிய அணியில் பங்கேற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தார்.

அதேநேரம், இலங்கை தேசிய அணியில் சிறந்த பின் கள வீரராக விளங்கினார். கடந்த ஆண்டு இடம் பெற்ற SAFF கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில், இந்திய அணியுடனான போட்டியில் சிறந்த வீரருக்கான விருந்தினை பெற்றுக்கொண்டார்.

இந்த போட்டி சமநிலையில் முடிவடைந்திருந்தது. இவ்வருடத்திற்கான மிக பிரபலமான வீரருக்காக இடம் பெற்ற கருத்து கணிப்பில் ரன்னரப்பாக பியூஸ்லஸ் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவரது மரணத்திற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

விசேட சட்டங்களை...

எனவும் முதலாளிகளுக்கு மாத்திரமன்றி தொழிலாளர்களுக்கும் 4 அல்லது 5 ஏக்கரை ஒதுக்கி அதன் மூலம் கிடைக்கும் கொழுந்தினை தொழிற்சாலைக்கு வழங்கும் நடைமுறை அவசியம் எனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

அவ்வாறு செய்யாவிட்டால் பெருந்தோட்டங்களை பாதுகாப்பது சிரமமாக அமைந்துவிடும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஹட்டனில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அமைச்சர் இவற்றைக் கூறினார். தொடர்ந்து அமைச்சர் உரையாற்றுகையில்,

1000 ரூபா சம்பள பிரச்சினையின் போது, அதனை பெற்றுக்கொடுக்க கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாதிடும் தொழிற்சங்கங்களால் முடியாமற் போனது. தொழிற்சங்கங்கள் பிரிந்து காணப்படுகின்றமையே இதற்கான காரணமாக அமைந்தது எனவும் அவர் கூறினார்.

தொழிற்சங்கங்களிடையே காணப்படும் வேற்றுமைகளால் தொழிலாளர்கள் நிர்கதியாகியுள்ள நிலையில், முதலாளிமார் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொண்டுள்ளதாகவும் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அவ்வாறான நிலையில், இந்த பிரச்சினைக்கு தீர்வு வழங்க தொழில் அமைச்சராலோ அரசாங்கத்தலோ முடியாது. இன்று 85 வீதமான தோட்டங்களில் 1000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. கிடைக்காத இடங்களும் உள்ளன. தற்போதுள்ள வழக்கு காரணமாக அதற்கான தீர்வை பெற்றுக் கொடுக்க முடியாதுள்ளது. எனினும், தொழிலாளர்களுக்கான உரிய பிரதிபலன்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம். தேவை ஏற்பட்டால் விசேட சட்டம் ஒன்றையாவது பாராளுமன்றத்தில் கொண்டு வந்து சம்பளத்தை உறுதிப்படுத்துவோம் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் குறிப்பிட்டார்.

மக்களின் சுதந்திரம், ...

எம்பிலிபிட்டிய மகாவலி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கமைய, சிக்கல்களற்ற காணிகளின் உரித்துரிமையை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், ரண்பிம காணி உறுதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில், சிக்கலற்ற ஒரு இலட்சம் காணிகளின் உரித்துரிமையை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, 35,000 காணி உறுதிப் பத்திரங்கள், 10 வலயங்களைச் சேர்ந்த விவசாய மக்களுக்கு வழங்கப்படுகின்றன. அடுத்த ஆண்டு இறுதிக்குள், மகாவலி பிரதேசங்களில் வசிக்கும் விவசாய மக்கள் அனைவருக்குமான காணி உறுதிப் பத்திரங்களை வழங்கி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

காணியின் சட்டபூர்வ உரிமை கிடைப்படதன் மூலம், அந்தக் காணியை குடும்ப உறுப்பினரொருவரின் பெயருக்கு மாற்றம் செய்தல், பாதுகாப்புக் கருதி நிதி நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுதல் போன்ற பல அனுகூலங்களைக் காணி உரிமையாளர் பெறுவார்.

ரண்பிம காணி உறுதி வழங்கும் நிகழ்வைக் குறிக்கும் வகையில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரால், 30 பேருக்கான காணி உறுதிகள் வழங்கப்பட்டன.

அந்நியச் செலாவணி பற்றாக்குறையானது, இன்று நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும். கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக, சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளால் கிடைக்கப்பெறும் செலாவணி இழப்பு, இதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

முந்தைய அரசாங்கங்கள் பெற்றிருந்த கடன்களை வட்டியுடன் செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகள், தனது அல்லது தனது அரசாங்கத்தின் தவறுகளால் ஏற்பட்டவை அல்லவென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ரஷ்ய படைகளுடன்...

நேற்று ஞாயிற்றுக்கிழமை சூரியோதயத்திற்கு முன்னர் கார்கோவில் உள்ள இயற்கை வாயு குழாய் ஒன்றை ரஷ்ய துருப்புகள் வெடிக்க வைத்ததாக உக்ரைன் அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. ரஷ்யாவின் இலகு ரக இராணுவ வாகனங்கள் நகருக்குள் நுழைந்ததாக பிராந்திய ஆளுநர் ஒலேஹ் சினேகுபோவ் தெரிவித்துள்ளார்.

1.4 மில்லியன் மக்கள் தொகை கொண்ட நகரின் குடியிருப்பாளர்கள் வீடுகளிலேயே தங்கியிருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தலைநகர் கியேவுக்கு வெளியில் இருக்கும் எண்ணெய் நிலை ஒன்று ஏவுகணை மூலம் தாக்கப்பட்டதை அடுத்து நச்சு காற்று பற்றிய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. கியேவில் இருந்து தெற்காக 18 மைல் தொலைவில் இருக்கும் வசில்கீவில் பாரிய வெடிப்பு ஏற்பட்டதோடு இரவு வானம் ஒளிரும் அளவுக்கு பாரிய தீப் பிழப்பும் வெளியாகியுள்ளது.

ரஷ்யாவின் உக்ரைன் மீதான படையெடுப்பு நான்காவது நாளை தாண்டி இடம்பெறும் நிலையில் பெலாரஸ் நாட்டில் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு ரஷ்யா உக்ரைனை அழைத்தபோதும் பெலாரஸில் பேச்சுவார்த்தை நடத்த உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி மறுத்துள்ளார். வேறு ஒரு நகரில் பேச்சை நடத்த அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் மேற்குலக நட்பு நாடுகள் ரஷ்யா மீதான தடைகளை மேலும் இறுக்கியுள்ளது. பிரதான உலகளாவிய கட்டண முறையான ஸ்விப்ட் அமைப்பில் இருந்து கணிசமான ரஷ்ய வங்கிகளை நீக்க ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகள் இணங்கியுள்ளன.

இலங்கை முழுவதும்...

உரையாற்றும் போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அனைவருக்கும் சுத்தமான குடிநீரை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆஸ்திரிய அரசாங்கம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதியில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் கிரமகடுவான நீர் வழங்கல் திட்டம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 34 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு சுத்தமான குடிநீர் வழங்கப்படும்.

வராபிட்டியவிலுள்ள கிரம நீர்த்தேக்கத்திலிருந்து நீரைப் பெற்று வெலந்த கொடவில் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணித்து அப்பகுதியில் வசிக்கும் சுமார் 26,000 மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், வலஸ்முல்ல, கிரம, கட்டுவன, மித்தெனிய வீதியில் 24 கிலோமீற்றர் தூரத்திற்கு குழாய்களை பொருத்தி குடிநீர்ப் பிரச்சினையை அதிக அளவில் தீர்ப்பதற்கு முடிந்துள்ளது.

சுமார் 40 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிரம பேருந்து நிலையம் மஹிந்த சிந்தனை புறநெகும திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தினால் முற்றிலுமாக நிறுத்தப்பட்டிருந்த இந்த பேருந்து நிலையமானது ஆறு கடை தொகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

நிகழ்வில் பிரதமர் ஆற்றிய முழுமையான உரை வருமாறு,

எண்பத்தைந்து இடைத்தேர்தலின் போது நாங்கள் இங்கு வந்து கிரம பகுதியில் இருந்து பிரசாரம் செய்தது எனக்கு நினைவிருக்கிறது. அமைச்சர் ஜோர்ஜ் ராஜபக்ஷவின் காலத்திலும் அதற்கு முன்னரும் உங்களது பெற்றோர், இந்த இளைஞர்களின் பெற்றோர் உள்ளிட்ட குழுக்கள் இந்தப் பிரதேசத்தில் எமக்கு ஆதரவளித்தனர்.

அதனுடன் இன்று பல புதிய அபிவிருத்தி முன்மொழிவுகள் இந்தப் பிரதேசத்திற்கு வந்துள்ளன.

கடந்த அரசாங்கத்தின் போது இந்த மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டன. இந்தப் பிரதேசத்தில் மட்டுமன்றி முழு நாட்டிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

இதனால் அன்று நாம் ஆரம்பித்த அபிவிருத்தித் திட்டங்கள் முடங்கின. சர்வதேச துறைமுகங்கள், விமான நிலையங்கள், இந்தப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி பணிகள் அனைத்தும் நம்மைப் பழிவாங்கும் எண்ணத்தில் கடந்த அரசால் நிறுத்தப்பட்டது. எதுவும் செய்யவில்லை. யாரை பழிவாங்கினார்கள்? இறுதியில் ஹம்பாந்தோட்டை மாவட்ட மக்களையும், மொனராகலை மாவட்ட மக்களையும் இந்தப் பிரதேசத்தில் மட்டுமன்றி நாடெங்கும் உள்ள எமது மக்களையே இவர்கள் பழிவாங்கினர்.

இலங்கை மீதான...

பதிலளிப்பதற்கு அரசாங்கம் தயார் நிலையில் உள்ளது.

ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக இலங்கையின் சார்பில் ஜெனீவா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர்

ஜீ. எல். பீரிஸ், நீதியமைச்சர் அலி சப்ரி ஆகியோர் அது தொடர்பில் தெரிவிக்கையில்:

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் அறிக்கைக்கு உரிய பதில் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் இலங்கையின் நிலைப்பாட்டினை ஆணித்தரமாக முன்வைப்பதற்கும் தயார் நிலையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இலங்கையிலிருந்து சென்றுள்ள இராஜதந்திர தூதுக்குழுவினருக்கு ஐ.நா மனித உரிமைப் பேரவையின் சவால்களை எதிர்கொள்ள தேவையான ஆலோசனைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.நா மனித உரிமைப் பேரவையின் 49வது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் அதன் அமர்வுகள் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளன.

ஐ.நா மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் தொடர்பில் அமைச்சர்கள் இருவரும் மேலும் தெரிவிக்கையில்:

ஐ.நா மனித உரிமைப் பேரவை தொடர்ச்சியாக இலங்கை தொடர்பில் முன்வைத்து வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஐ.நா மனித உரிமை பேரவையிலும் சர்வதேச ரீதியிலும் நாடுகள் அமைப்புக்கள் என இலங்கைக்கு எதிராக பெரும் விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன. எத்தகைய அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் அதனை நாம் வெற்றிகரமாக எதிர்கொள்வோம்.

அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள நீதியமைச்சர் அலி சப்ரி:

ஐ.நா மனித உரிமை ஆணையாளரினால் இலங்கைக்கு அனுப்பியுள்ள அறிக்கை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதுடன் அதற்கான பதில் அறிக்கையும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதேவேளை கூட்டத்தொடரில் அரசாங்கத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பொறுத்தவரை மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகள். பயங்கரவாத தடைச்சட்டத்தின் மறுசீரமைப்பு போன்ற விடயங்களில் அரசாங்கம் நியாயமாக செயற்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கில் நீதித்துறை சம்பந்தமான வேலைத் திட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் பல வழக்குகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

காணி வழக்குகள் உட்பட பல்வேறு வழக்குகளில் தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

படையினர் வசமிருந்த பொதுமக்களின் காணிகள் 90 வீதம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் எஞ்சியுள்ள காணிகளையும் மீளப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஸ)

போதுமான மருந்து...

தொடர்பில் பல தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளதாக இராஜாங்க அமைச்சின் செயலாளரான வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், பாரசிட்டமால் தேவை அதிகரித்துள்ளதால், பாரசிட்டமால் உற்பத்தியை துரிதப்படுத்துமாறு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாரசிட்டமோல் மருந்தை மொத்தமாக கொள்வனவு செய்ய வேண்டிய அவசியமில்லை என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா விடுதியில்....

வருகின்றனர். இது தொடர்பாக தெரியவருவதாவது;

நுவரெலியாவிற்கு நேற்று முன்தினம் குருணாகலை பகுதியில் இருந்து

ஒரு குழுவினர் உல்லாச பிரயாணிகளாக தங்களுடைய விடுமுறையை கழிப்பதற்காக வருகை தந்து, நுவரெலியா தனியார் விடுதி ஒன்றில் தங்கி உள்ளனர்.

இதன்போது இரவு இவர்கள் தங்களுடைய உணவு தேவைக்காக பயன்படுத்திய 'பாபிகியுவ்' என்று கூறப்படும் இயந்திரத்தை தங்களுடைய குளிரை பாதுகாத்து கொள்வதற்காக அறைக்குள் வைத்து நித்திரைக்கு சென்றுள்ளனர்.

இதன்போது அந்த இயந்திரத்தில் இருந்து வெளியேறிய நச்சு வாயு காரணமாக இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர் .

இவர்களுடைய சடலம் நேற்று (27) காலை நுவரெலிய மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனை இடம் பெற்றதன் பின்பு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட இருப்பதாக நுவரெலிய வைத்திய சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு இதே போன்றதொரு சம்பவம் நுவரெலியாவில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தியாவசிய சேவைகளுக்கு...

வந்திருந்த கப்பலிலிருந்து 37 ஆயிரத்து 500 மெட்ரிக் தொன் டீசல் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் அந்த டீசல் எதிர்வரும் சில தினங்களில் முடிவடைந்து விடும் என்றும்

மீண்டும் டொலரை வழங்கி எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியாது போனால் எரிபொருள் தட்டுப்பாடு அதிகரிக்கும் நிலை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான நிலை ஏற்பட்டால் அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே எரிபொருளை விநியோகிக்க வேண்டி ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தகைய நிலையில் பெருமளவிலான தனியார் போக்குவரத்து சேவைகள் சீர்குலையும் நிலையும் ஏற்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை சற்று குறைவடைந்துள்ளதாக வெளிநாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கிடையிலான மோதல் காரணமாக கடந்த வாரத்தில் மசகு எண்ணெயின் விலை வெகுவாக அதிகரித்தது.

எனினும் அது தற்போது சற்று குறைந்துள்ளதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்று 94.70அமெரிக்கன் டொலராக இருந்த நிலையில் மேற்படி மோதல் காரணமாக நான்கு நாட்களுக்குள்

அதன் விலை 106 டொலராக அதிகரித்ததுடன் தற்போது அது 102 டொலராக சற்று குறைந்துள்ளதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

விலையை மட்டுமன்றி... (03ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறு தெரிவித்தார். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி பிற்பகுதியில் இருந்து மே மாதம் வரை தேவைக்கேற்ப மின்சாரம் வழங்குவதில் சவால்கள் எழுகின்றன.

எரிசக்தியை சரியாக நிர்வகிப்பதன் மூலம் இந்த சவால்களை ஓரளவு கட்டுப்படுத்த முடிவதாகவும் அவர் கூறினார்.

மின்சாதனங்களை பாவிக்க பொழுது, விலையில் மட்டும் கவனம் செலுத்தாமல், பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவிலும் கவனம் செலுத்துவதும் அவசியம் எனவும் மேலும் மாலை 6.30 9.30 மணிக்குள் " வொசிங் மெஷின் , தண்ணீர் இறைத்தல் அயன் பண்ணுதல் போன்றவற்றுக்கு முடிந்தவரை மின்சாதனப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இன்றைய மின்வெட்டுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

செய்யவில்லை. எனவே புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அபிவிருத்தி செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானம் எடுத்துள்ளார். அந்த முடிவின்படி நாங்களும் செயல்படுகிறோம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நுரைச்சோலை மின் நிலையம் அமைத்து அது போன்று இந்த பிரச்சினைகளையும் உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுப்பார்.எதையும் செய்யாத நல்லாட்சி அரசாங்கம் தான் மொழுகுவர்த்தியையும் டோர்ச்சையும் தூக்கிக் கொண்டிருக்கிறார்கள் இது ஒன்றும் புதிய விடயம் அல்ல. தற்பொழுது மழை போதிய அளவு கிடைக்கவில்லை. அத்தோடு நல்லாட்சியில் தேவையான முடிவுகள் அடுத்து செயற்படுத்தப்படவில்லை இவை தான் இந்த பிரச்சினைக்கு பிரதான காரணம் என்றார். உணவு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்சாரம் துண்டிப்பு தொடர்பில் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துவது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

மகிந்த ராஜபக்ச உருவாக்கிய சீனாவுக்கு அடுத்தபடியாக இருந்த பொருளாதார வளர்ச்சி விகிதத்தைத் தக்க வைக்க முடியாத ஆட்சியே அன்று இருந்தது. அரசியல் கூட செய்யாத ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எப்படி வந்து இதையெல்லாம் செய்தார் என விசனம் தெரிவிக்கின்றனர். அதில் எங்களுக்கு ஆச்சரியமில்லை. அதனால் தான் நெடுஞ்சாலை அமைக்கும் போது அதனை சாப்பிட முடியுமா என்று கேட்கிறார்கள். தங்களின் வயிற்றை நிரப்புவதற்காக தான் அன்று நெடுஞ்சாலைகளை அமைத்தனர்.

ஆனால் நாங்கள் இந்த நாட்டு மக்களின் எதிர்காலத்திற்காக தான் இவற்றை நிர்மாணித்து வருகிறோம் தேர்தல் வந்தால் கோவிட் கோவிட் என்று சொல்லி ராஜபக்ச எதுவும் செய்யவில்லை என்பார்கள்.

எனவே நாங்கள் ஆட்சியில் இருந்தால் இப்படி செய்திருப்போம் எங்களுக்கு அதிகாரம் கொடுங்கள் என்பார்கள். (பா)

உக்ரைனிலுள்ள... (03ஆம் பக்கத் தொடர்)

உக்ரைன் நிலைமை குறித்தும் அங்குள்ள இலங்கையர் குறித்தும் தொடர்ச்சியாக ஆராய்ந்து வருவதாகவும் 24 மணிநேரமும் செயற்படும் அவசர தொலைபேசி இலக்கமொன்று அறிமுகம் செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இலங்கையர் எவருக்கும் இதுவரை எந்த ஆபத்தும் ஏற்படவில்லை எனவும் அவர்கள் பாதுகாப்பாக உள்ளதாகவும் அவர்சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் தங்கியுள்ள... (03ஆம் பக்கத் தொடர்)

இலங்கையில் தற்போது சுமார் 4000 உக்ரைன் பிரஜைகள் தங்கியுள்ள அதேவேளை 11 500 ரஷ்ய சுற்றுலா பயணிகளும் நாட்டில் தங்கியுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இணையவழியூடா... (03ஆம் பக்கத் தொடர்)

அதே போன்று யுவதிகள் இளைஞர்களுடன் காதல் கொண்டுள்ள சந்தர்ப்பங்களில் அல்லது நண்பர்களாக இருந்த சந்தர்ப்பங்களில் எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் குறித்த யுவதிகளின் திருமணத்தின் போது இணையதளங்களில் வெளியிடப்படுகின்றமை தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.மேலும் பிறந்தந

நகர்வலம்

தர்காநகர் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் 105 ஆவது வருட பூர்த்தி விழாவும் ஏழாவது பட்டமளிப்பு விழாவும் சனிக்கிழமை (26) காலை கல்லூரி மண்டபத்தில் நிர்வாக சபைத் தலைவர் மஸா ஆலிம் தலைமையில் நடைபெற்றது. அரூஸிய்யதுல் காதிரிய்யாவின் ஆன்மீக தலைவர் சங்கைக்குரிய கலாநிதி தைக்கா அஹ்மத் நாஸிர் ஆலிம் அவர்களும் தர்காநகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் நஜீப் பின் அமீர் ஆலிம் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர். இதன்போது பிரதம அதிதி உரை நிகழ்த்துவதையும் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு பிரதம அதிதி உட்பட பிரமுகர்கள் சான்றிதழ்களை வழங்கிவைப்பதையும் மஸா ஆலிமின் சேவையை பாராட்டி அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் கலந்துகொண்டோர்கள் மற்றும் நிகழ்வின்போது மத்ரஸா தொடர்பாக வெளியான தினகரன் பத்திரிகை பிரதிகள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பேருவளை விசேட நிருபர்)

புத்தளம் மாவட்ட எரிபொருள் நிலையங்களில் திடீர் சோதனை

நுகர்வோர் அதிகார சபை திடீர் சுற்றிவளைப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நுகர்வோர் அதிகார சபையினர் சோதனை நடவடிக்கைகளை (23) மேற்கொண்டனர்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தற்போதுள்ள எரிபொருள் அளவுகள் இதன்போது பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் மற்றும் பெற்றோல் உள்ளிட்ட எரிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளனவா என்பதனை கண்டறியும் நோக்கில் இந்த சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் புத்தளம் மாவட்ட அலுவலகத்தின் கடமைநேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதன்படி புத்தளம் மற்றும் மாதம்பை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மேற்படி பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

விலை அதிகரிப்பை எதிர்பார்த்து சில எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் எரிபொருளை மறைத்து வைத்திருக்கலாம் என மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றனர். இந்த நிலையிலேயே , இன்றைய தினம் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சோதனையிடப்பட்டுள்ளன.

இதேவேளை , நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளுடன் பொலிஸாரும் இணைந்து சோதனையிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மகாவலி பிரதேசத்தில் வசித்து வரும்;

8000 குடும்பங்களுக்கு காணி உறுதிகள் ஜனாதிபதியினால் வழங்கி வைப்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

மகாவலி பிரதேசத்தில் வசித்து வரும் ஒரு இலட்சம் விவசாய குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் 'ரன்பிம' காணி உறுதிகள் வழங்கும் அங்குரார்ப்பன தேசிய நிகழ்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் எம்பிலிபிடிய மகாவலி விளையாட்டு மைதானத்தில் (26) நடைபெற்றது. மகாவலி வளவை பிரதேசத்தில் வசிக்கும் 8000 குடும்பங்களுக்கு இதன் போது ரன்பிம காணிஉறுதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஆகியோருடன் அமைச்சர்கள், பிரதிஅமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மேலும் பலர் கலந்துகொண்டனர்.

மகாவலி வளவை பிரதேசத்தில் வசிக்கும் 8000 குடும்பங்களுக்கு இதன் போது ரன்பிம காணிஉறுதிகள் வழங்கி வைக்கப்பட்டன. மகாவலி பிரதேசங்களில் வசித்துவரும் ஒரு இலட்சம் விவசாய குடும்பத்தினருக்கு காணி உறுதிகளை வழங்கும் தேசிய திட்டத்திற்கு அமைய அதன் முதல் கட்டமாகவே இந்த நிகழ்வு இடம்பெற்றது. பத்து மகாவலி வலயங்களிலும் இத் திட்டம் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்காக இதுவரை தற்பொழுது 35,000 ரன்பிம காணி உறுதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதுவரை மகாவலி வளவை பிரதேசத்தில் மாத்திரம் 43,000 குடும்பங்கள் விவசாய நிலங்களில் காணி உறுதிகள் இன்றி வசித்து வருகின்றனர். இதனால் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் வழிகாட்டலிலும் ஆலோசனையிலும் இந்த குடும்பங்களுக்கு ரன்பிம காணி உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீண்டகால இடைவெளிக்குப் பிறகு தங்கள் காணிகளுக்கு உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி உட்பட அரசாங்கத்திற்கும் விவசாயிகள் தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

வெலிகம பள்ளிவாசல்களில் இன்று மிஃராஜ் தின நிகழ்வுகள்

வெலிகம தினகரன் நிருபர்

புனித மிஃராஜ் தினத்தையொட்டி இன்று (28) திங்கள் கிழமை வெலிகம பகுதி பள்ளிவாசல்களில் விஷேட நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியுள்ளன.

விஷேட பயான் நிகழ்ச்சிகள் , அன்னதான நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் , பள்ளிவாசல்கள் நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கடந்த வருடங்களில் நாட்டில் ஏற்பட்டிருந்த கொவிட் 19 காரணமாக மிஃராஜ் நிகழ்ச்சிகள் சிறப்பாக முன்னெடுக்கப்படாத நிலையில் இம்முறை அதனை சுகாதார வழிக்காட்டலுக்கமைய சிறப்பாக மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொவிட் 19 தொற்று நீங்குவதற்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீள்வதற்கும் சுபீட்சமான வாழ்வு மலர்வதற்குமாக விஷேட துஆப் பிரார்தனைகளும் இம் முறை மிஃராஜ் தினத்தன்று இடம் பெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.

கொழும்பு பாலத்துறை நாகலம்வீதி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அஷ்டலக்ஷ்மி திருக்கோயில் 21ஆவது வருடாந்த உற்சவம் ஆலய நித்திய தேசிகர் விமலேந்திரர் முன்னிலையில் , பிரம்மஸ்ரீ சுந்தர வகுதரசர்மா தலைமையில் கடந்த 15ஆம் ஆரம்பமாகியது. 26 ஆம் திகதி மாலை நடைபெற்ற முத்தேர் பவணி உற்சவத்தில் பிரதான கும்பம் ஊர்வலமாக வருவதையும் கலந்து கொண்ட பிரதமரின் இந்து சமய விவகார ஆலோசகர் சிவஸ்ரீ பாபுசர்மா இராமச்சந்திர குருக்கள் முத்துமாரி அம்பாளுக்கு பிரதான கும்ப நீர் அபிஷேகம் செய்வதையும், தொடர்ந்து அவருக்கான பொன்னாடை கௌரவத்தை அறங்காவலர் விமலேந்திரர் தேசிகர் வழங்கி வைப்பதையும் காணலாம். (படம் : கொழும்பு வடக்கு நிருபர்)

கல்நேவ தினகரன் நிருபர் விபத்தில் காயம்

திறப்பனை தினகரன் நிருபர்

லேக் ஹவுஸ் நிறுவனத்தின்அநுராதபுர மாவட்ட கல்நேவ தினகரன் விசேட நிருபர் டப்ளியூ.எம். பைசல் மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளையில் விபத்துக்குள்ளாகி காயமடைந்த நிலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.

கலாவெவ அவுக்கன வலவ்வே கம பிரதேசத்தில் கடந்த (25) இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. பாதையோரமாக மின்சார கம்பத்தில் நைலோன் கயிற்றினால் கட்டப்பட்டிருந்த மாடொன்று இவர் பயணித்த மோட்டார் சைக்கிளின் குறுக்காக பாய்ந்ததினால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

கலாவெவ பிரதேசத்தில் நடைபெறும் உயர்தர வகுப்பொன்றுக்கு தனது மகனை அழைத்துச் சென்றபோதே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. கால் மற்றும் கை என்பவற்றில் ஏற்பட்ட காயம் காரணமாக தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.

கல்நேவ பிரதேச சபை; முன்னாள் உறுப்பினர் ரியால்தீன் காலமானார்

(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

கல்நேவ பிரதேச சபையின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் என்.ரியால்தீன் சிறிது காலம் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த 25 ஆம் திகதி இரவு காலமானார். நேகமையை பிறப்பிடமாக கொண்ட இவர் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரதேச சபை தேர்தலில் கல்நேவ பிரதேச சபைக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக போட்டியிட்டு பெரும்பான்மை இன மக்களின் ஆதரவுடன் அதிகபடியான வாக்குகளினால் வெற்றி பெற்று தெரிவு செய்யப்பட்டார்.

கல்நேவ பிரதேச சபைக்காக ஒரே ஒரு முஸ்லிம் கிராமத்தை கொண்ட பிரதேச சபை ஒன்றில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் முதன் முதலாக தெரிவு செய்யப்பட்டு இந்த சாதனையை ஏற்படுத்தினார்.இவர் இன,மத,கட்சி பேதமின்றி சேவை செய்த அன்னார்

நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். இவரின் ஜனாஸா நேகம மொஹிதீன் ஜூம்ஆ பள்ளிவாசல் மையவாடியில் (26) நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரின் ஜனாஸா நல்லடக்கத்தில் அரசியல்வாதிகள், கல்விமான்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலர் கலந்து கொண்டதுடன் பெருந்தொகையான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

புதையல் தோண்டிய நால்வர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

புதையல்தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நான்கு பேரை அறலகங்வில பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய கடந்த 25ஆம் திகதி மாலை அறலகங்வில பொலிஸ் பிரிவிலுள்ள அளுத்ஓய பகுதியில் நடத்திய சுற்றிவளைபின்போது புதையல் தோண்டிக் கொண்டிருந்த நான்கு பேரை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவற்றை அறலகங்வில பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 32 மற்றும் 60 வயதுடய பிம்புறத்தாவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அறலகங்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் பொலன்னறுவ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பகிரங்க அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழானது

கம்பனியின் பழைய பெயர்:

ஜினதாச பிரதர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

பதிவு இல: PV 3969

பதிவு அலுவலகம்: இல. 263, விஜய குமாரனதுங்க மாவத்தை, கொழும்பு -05

கம்பனியின் புதிய பெயர்:

மெக்னா வெல்த் (பீவீடி) எல்டிடி

பெயர் மாற்றச் சான்றிதழ் திகதி: 2021.07.30

எய்ம்ஸ் செக்ரடேரியல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்

கம்பனியின் செயலாளர்கள்

திகதி 25.02.2022 வியாழக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4689 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 13,553,270.00
ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 8 7 3 1 6 1 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 47,646,366.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் : 2984 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,294,160.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 02 29 56 55 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,073,681.20

மேகா பவர் 23+ — சீட்டிழுப்பு இலக்கம் 1037 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,745,720.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 238,037,290.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து E — சுப்பர் இலக்கம் 04 — வெற்றி இலக்கங்கள் 06 10 46 60

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 719 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,764,260.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 02 09 28 47 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,323,690.00

ஹந்தஹன ராசி சுப பலன் — சீட்டிழுப்பு இலக்கம் : 0030 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,467,820.00
இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 07 24 38 42 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,614,564.76

வாசனா சம்பத Vasana Sampatha — சீட்டிழுப்பு இலக்கம் : 1698 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,938,040.00
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 40 43 70 93 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,627,329.10

ஜாதிக லொதரய மண்டலய / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01 — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 — பெக்ஸ்: 0114 669 416

திகதி 26.02.2022 சனிக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4690 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,399,330.00
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 8 3 9 4 3 0 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 48,538,083.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் : 2985 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,815,420.00
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 13 47 68 70 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,452,898.40

மேகா பவர் 23+ — சீட்டிழுப்பு இலக்கம் 1038 ரூ. 4,372,060.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 238,166,538.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து E — சுப்பர் இலக்கம் 05 — வெற்றி இலக்கங்கள் 21 24 26 78

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 720 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,947,200.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 22 45 48 69 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,323,690.00

ஹந்தஹன ராசி சுப பலன் — சீட்டிழுப்பு இலக்கம் : 0031 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,839,980.00
இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 09 34 40 55 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,621,548.60

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA — சீட்டிழுப்பு இலக்கம் : 1216 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,151,300.00
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 8 4 5 9 0 4 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,207,989.20

ஜாதிக லொதரய மண்டலய / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01 — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 — பெக்ஸ்: 0114 669 416

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 பெப்ரவரி
28 திங்கட்கிழமை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மூன்று தள கட்டடத் தொகுதி திறந்து வைப்பு!

யாழ்.குறூப் நிருபர்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் எம்.ஜே.எப் அறக்கட்டளை நிதியம் மற்றும் இயன் மற்றும் பர்பராகரன் நிதியத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று தள பெண் நோயாளர் விடுதிக் கட்டடத் தொகுதி கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் எம்.ஜே.எப் அறக்கட்டளை நிதிய அறங்காவலர்களான டில்கான் பெர்னாண்டோ, கே.ஆர்.ரவீந்திரன், ராஜன் ஆசீர்வாதம் மற்றும் இயன் பர்பராகரன் நிதிய ஸ்தாபகர் இயன். கே.கரன் ஆகியோரால் புதிய கட்டடத்தொகுதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

124 மில்லியன் ரூபா செலவில் பெண்கள் உளநல சிகிச்சை விடுதி, பெண்கள் மருத்துவ விடுதி, பெண்கள் சத்திரசிகிச்சை விடுதி என 100 படுக்கை வசதிகளை கொண்டதாக இந்த கட்டடத் தொகுதி காணப்படுகிறது. இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேன, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.மோகநாதன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் கமலநாதன், வைத்திய அதிகாரிகள் உத்தியோகஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஜேர்மனியில் குறைந்த வயதில் இரு துறைகளில் சாதித்த தமிழன்

ஜேர்மனியின் வடமேற்கு மாநிலத்தில் மிகக்குறைந்த வயதில் இரு துறைகளில் உயர் பட்டங்களை பெற்று தமிழ் இளைஞனாக அனங்கன் சின்னையா பெருமை சேர்த்துள்ளார்.

ஜேர்மனியின் வடமேற்கு மாநிலத்தில் வாழ்ந்துவரும் அனங்கன் சின்னையா என்ற இளைஞன் தனது 29 ஆவது வயதில் மாஸ்டர் லோ மற்றும் பட்டய கணக்காளராக (master low and chartered accountant) குறைந்த வயதில் கல்விப் புலத்தில் சாதனை படைத்துள்ளார்.

அனங்கன் சின்னையாவை கௌரவிக்கும் முகமாக கடந்த 22 ஆம் திகதி ஜெர்மனியின் வடமேல் மாநில நிதி அமைச்சு தனது உத்தியோகபூர்வ இலச்சினை பொறிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கி கௌரவித்தது.

இவர் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட இலங்கை இந்து பௌத்த கலாச்சார பேரவையின் பொதுச் செயலாளரும் ஜெர்மனியின் இலங்கைக்கான குடிவரவு குடியகல்வு சட்ட ஆலோசனை நிறுவனத்தின் தலைவருமான தேசமானிய எம்.டி இராமச்சந்திரனின் ஒரே ஒரு புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலையில் நான்குபேர் பேராசிரியர்களாகப் பதவியுயர்வு

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் நால்வர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இருவரும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், பொறியியல் பீடத்தைச் சேர்ந்த ஒருவருமாக நான்கு சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று (27), காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் இந்த பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, வணிக முகாமைத்துவ பீடத்தின் சந்தைப்படுத்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி திருமதி சிவாணி சண்முகதாஸ், கலாநிதி சி. சிவேசன் ஆகியோர் சந்தைப்படுத்தலில் பேராசிரியர்களாகவும், விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பி. அபிமன் இரசாயனவியலில் பேராசிரியராகவும், பொறியியல் பீடத்தின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் துறையின் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி த. திருவரன் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

வன்னி காணி பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் வவுனியாவில் நடமாடும் சேவை

வவுனியா விசேட நிருபர்

வன்னியின் மூன்று மாவட்டங்களிலும் காணப்படும் காணி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான காணி அமைச்சின் நடமாடும் சேவை ஒன்று காணி அமைச்சர் தலைமையில் வவுனியாவில் இடம்பெற்றது. வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் இந்நடமாடும் சேவை நேற்று (27) காலை முதல் மாலை வரை இடம்பெற்றது.

வன்னியின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட காணி தொடர்பான பிரச்சினைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவற்றிற்கு விரைவான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க ஜனாதிபதி, காணி அமைச்சருக்கு வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக, குறித்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

இதன் போது வன வள திணைக்கள மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்திற்குட்பட்ட காணிகள் உட்பட வன்னி மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு இதன்போது தீர்வு காணப்பட்டது.

குறித்த நடமாடும் சேவையில் காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, பாராளுமன்ற உறுப்பினர்களான கு.திலீபன், கே.கே.மஸ்தான், செல்வம் அடைக்கலநாதன், காணி அமைச்சின் செயலாளர், காணி அமைச்சின் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், வனவள மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சின் செயலாளர்கள், வடமாகாண பிரதம செயலாளர், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்கள், திணைக்கள தலைவர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மலையக மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உணவுப் பொருள்கள் வழங்கல்

கரவெட்டி தினகரன் நிருபர்

ஊவா மாகாண பண்டாரவளை கிரேக்கத் தோட்டத்திலுள்ள நாளாந்தம் கூலி வேலை செய்யும் 125 குடும்பங்களுக்கு 350000 ரூபா பெறுமதியான அத்தியவசிய உலர் உணவுப்பொருட்கள் இன்றைய தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ் உலர் உணவு வழங்கும் நிகழ்வானது கிரேக்கத் தோட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சக்தி அரங்கத்தில் இடம் பெற்றது.

இவ் உதவியை வடமராட்சி செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தின் இயக்குநர் மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாக சென்று வழங்கி வைத்தார். இதில் குறித்த தோட்டத்தின் சேர்ந்த பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கரவெட்டியில் கமநல உணவகம்

கரவெட்டி கமநல சேவைகள் திணைக்களத்துடன் இணைந்த கமநல உணவகம் சனிக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது. குறித்த கமநல உணவகத்தை முன்னாள் விவசாய பிரதி அமைச்சரும்,யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் திறந்து வைத்தார்.

குறித்த கமநல உணவகம் அமைக்கும் செயற்பாடு அங்கஜன் இராமநாதன் விவசாய பிரதி அமைச்சராக இருந்த காலத்தில் "நாட்டிற்காக ஒன்றிணைவோம்" செயற்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு தற்போது உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச செய்திகள்

ரஷ்ய வங்கிகளுக்கு கடும் முட்டுக்கட்டை

பிரதான உலகளாவிய கட்டண முறையான ஸ்விப்ட் அமைப்பில் இருந்து கணிசமான ரஷ்ய வங்கிகளை நீக்க ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகள் இணங்கியுள்ளன.

ரஷ்ய மத்திய வங்கியின் சொத்துகள் முடக்கப்படுவதோடு, வெளிநாட்டு கையிருப்புகளை ரஷ்யா பெறும் திறனுக்கும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்த பின்னர் தற்போதுவரை விதிக்கப்பட்ட கடுமையான தடையாக இது உள்ளது.

'சர்வதேச நிதி அமைப்பில் இருந்து ரஷ்யாவை மேலும் தனிமைப்படுத்தும்' நோக்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூட்டு அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரஷ்யா தனது முக்கிய எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதிகளில் ஸ்விப்ட் அமைப்பில் அதிகம் தங்கியுள்ளது. ஸ்விப்ட் அமைப்பானது சர்வதேச வர்த்தகத்தை செயற்படுத்தும் வகையில் எல்லை கடந்த கட்டணங்களை வேகமாக செயற்படுத்துவதை சாத்தியப்படுத்துகிறது.

பெல்ஜியத்தை தளமாகக் கொண்ட இந்த அமைப்பு, உலகெங்கும் உள்ள 11,000க்கும் அதிகமான வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு இடையிலான பரிவர்த்தனைகளை இலகுபடுத்துகிறது.

உக்ரைனின் 2ஆவது பெரிய நகருக்குள் ரஷ்யா நுழைவு

வீதிகளில் மோதல்: பலி அதிகரிப்பு

உக்ரைனின் இரண்டாவது மிகப்பெரிய நகரான கார்கிவ் வீதிகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மோதல் வெடித்ததோடு நாட்டின் தெற்கில் உள்ள மூலோபாயமிக்க துறைமுகங்களை கைப்பற்ற ரஷ்ய படைகளின் அழுத்தம் அதிகரித்துள்ளது.

அதேபோன்று விமானத்தளங்கள் மற்றும் எரிபொருள் தளங்கள் மீதான உக்கிரத் தாக்குதல்கள் காரணமாக உக்ரைனில் ரஷ்ய படையெடுப்பு மற்றொரு கட்டத்தை தொட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை வரை கார்கிவ் புறநகர் பகுதியில் நிலைகொண்டிருந்த ரஷ்ய துருப்புகள் அந்த நகருக்குள் நுழைந்ததை அடுத்து உக்ரைனிய படையினருடன் வீதிகளில் மோதல் வெடித்துள்ளது.

ரஷ்யாவின் இலகு ரக இராணுவ வாகனங்கள் நகருக்குள் நுழைந்ததாக பிராந்திய ஆளுநர் ஒலேஹ் சினேகுபோவ் தெரிவித்துள்ளார். 1.4 மில்லியன் மக்கள் தொகை கொண்ட நகரின் குடியிருப்பாளர்கள் வீடுகளிலேயே தங்கியிருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இரவு நேரத்தில் நகரின் மீது ஏவுகணை மழை பொழிந்த நிலையிலேயே படையினர் முன்னேற்றம் இடம்பெற்றுள்ளது. இதில் ஒன்பது மாடி குடியிருப்பு கட்டடம் ஒன்றும் தாக்கப்பட்டுள்ளது.

அந்தக் கட்டடம் கடுமையாக சேதமடைந்த நிலையில் அங்கிருந்த வயதான பெண் ஒருவர் கொல்லப்பட்டு 60 பேர் வரை காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

அருகில் இருக்கும் எரிவாயு குழாய் ஒன்றையும் ரஷ்ய துருப்புகள் வெடிக்கச் செய்ததாக உக்ரைனிய அரச தொடர்பாடல்கள் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தலைநகர் கியேவுக்கு வெளியில் இருக்கும் எண்ணெய் நிலை ஒன்று ஏவுகணை மூலம் தாக்கப்பட்டதை அடுத்து நச்சு காற்று பற்றி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கியேவில் இருந்து தெற்காக 18 மைல் தொலைவில் இருக்கும் வசில்கீவில் பாரிய வெடிப்பு ஏற்பட்டதோடு இரவு வானம் ஒளிரும் அளவுக்கு பாரிய தீப் பிழம்பும் வெளியாகியுள்ளது.

இதற்கு அருகில் வசிக்கும் மக்கள் தமது வீடுகளில் ஜன்னல்களை மூடிக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். எனினும் கியேவில் இருக்கும் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே பாதுகாப்பான நிலத்தடி முகாம்களுக்கு சென்றுள்ளனர்.

தலைநகரில் இன்று திங்கட்கிழமை வரை கண்டிப்பான ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று காலை கியேவில் அமைதி நிலவியதாகவும் பொலிஸார், இராணுவத்தினர், ஆயுதமேந்திய தன்னார்வலர்களையே வீதிகளில் காண முடிந்ததாகவும் அங்கிருக்கும் செய்தியாளர்கள் விபரித்துள்ளனர்.

நிலத்தடி வாகனத் தரிப்பிடங்கள், மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் நிலவறைகளில் ஆயிரக்கணக்கானோர் இரவை கழித்து வருகின்றனர்.

உக்ரைனிடம் இருந்து எதிர்பார்த்ததை விடவும் கடுமையான எதிர்ப்பை ரஷ்ய படை சந்திப்பதால் அதன் முன்னேற்றம் மந்தம் அடைந்திருப்பதாக மேற்கத்தேய உளவுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை வடகிழக்கு நகரான ஒக்டியார்காவில் ரஷ்ய தாக்குதல்களால் ஏழு வயது சிறுமி உட்பட குறைந்தது ஆறு உக்ரைனியர்கள் கொல்லப்பட்டதாக உள்ளூர் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

சிறுவர் பராமரிப்பு நிலையம் மற்றும் அனாதை இல்லம் ஒன்றும் தாக்கப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டபோதும் ரஷ்யா அதனை மறுத்துள்ளது.

உக்ரைன் வெளியுறவு அமைச்சர் ட்மிட்ரோ குலேபா, போர் குற்றங்கள் பற்றி குற்றச்சாட்டு எழுப்பி இருப்பதோடு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணை ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

உக்ரைன் எங்கும் இடம்பெற்றுவரும் மோதல்களில் இதுவரை 210 பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதோடு 1,100 பேர் காயமடைந்திருப்பதாக உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

வீடுகள் மற்றும் முக்கிய உட்கட்டமைப்புகளுக்கு சேதங்கள் ஏற்பட்டிருக்கும் நிலையில் நூற்றுக்கணக்கானோர் குடிநீர் மற்றும் மின்சாரத்தை பெறமுடியாதிருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது. இந்தப் போரில் இருந்து தப்பிக்க ஆயிரக்கணக்கானோர் அண்டை நாடுகளை நோக்கி படையெடுத்து வருகின்றனர்.

ஐரோப்பா- ரஷ்யா இடையே பதிலுக்கு பதில் வான் தடை

ரஷ்யா சில நாடுகளின் விமானங்களுக்கு அதன் ஆகாயவெளியை மூடியுள்ளது.

லத்வியா, லித்துவேனியா, எஸ்டோனியா, சுலோவேனியா ஆகிய நாடுகளின் விமானங்களுக்கு ரஷ்யாவில் அனுமதி இல்லை. ஏற்கனவே பல்கேரியா, போலந்து, செக் குடியரசு ஆகிய நாடுகளின் விமானங்களுக்கு ரஷ்யா தடை விதித்திருந்தது.

ரஷ்யாவுக்கு எதிராகச் சில ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்டுள்ள தடைக்குப் பதிலடியாக ரஷ்யா இந்தத் தடையை அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் எரோபிளோட் விமானச் சேவைக்கு பிரிட்டன் தடை விதித்துள்ளது. பல்கேரியா, போலந்து, செக் குடியரசு, சுலோவேனியா ஆகியவை ரஷ்ய விமானங்கள் தங்கள் ஆகாயவெளியைப் பயன்படுத்தக்கூடாது என்று தடை விதித்துள்ளன.

இதேவேளை ரஷ்ய விமானங்களுக்கு தமது ஆகாயவெளியை மூடுவதற்கான ஏற்பாடுகளை தயார் செய்யும்படி ஜெர்மனி போக்குவரத்து அமைச்சர் வோல்கர் விசிங் உத்தரவிட்டுள்ளார்.

ரஷ்யப் படையுடன் போராட வெளிநாட்டினருக்கு அழைப்பு

ரஷ்ய படையுடன் போராடுவதற்கு வெளிநாட்டு தன்னார்வலர்களுக்கான சர்வதேச படை பிரிவு ஒன்றை உக்ரைன் உருவாக்கி இருப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைனியர்களுடன் இணைந்து போராடுவதற்கு விரும்பும் எல்லோருக்கும் அழைப்பு விடுப்பதாக செலென்ஸ்கி சமூக ஊடகத்தில் தெரிவித்துள்ளார்.

'ரஷ்ய போர் குற்றவாளிகளுக்கு எதிராக உக்ரைனுடன் இணைந்து போராடுவதற்கு விரும்பும் ஐரோப்பா மற்றும் உலகெங்கும் உள்ள அனைவரும் இங்கு வர முடியும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனிய நிலங்களை பாதுகாப்பதற்கான சர்வதேசப் படைப் பிரிவில் இந்த வெளிநாட்டு பிரஜைகள் இணைய முடியும் என்று அந்த அறிவித்தலில் மேலும் கூறப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு ஆயுதம் மற்றும் வெடிபொருட்களை வழங்குதற்கு முன்வந்திருக்கும் மேற்குலக நாடுகள் அங்கு தனது இராணுவத்தை அனுப்பவில்லை. உக்ரைன் நேட்டோ கூட்டணியில் அங்கம் வகிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உக்ரைன் எல்லையில் மக்கள் நீண்ட வரிசை

ரஷ்யாவின் தாக்குதலால் ஆயிரக்கணக்கான உக்ரைனியர்கள் அண்டை நாடுகளுக்கு படையெடுத்து வருகின்றனர்.

இந்தத் தாக்குதல் ஆரம்பித்து மூன்று நாட்கள் கடந்திருக்கும் நிலையில் போலந்து நாட்டில் மாத்திரம் 115,000க்கும் அதிகமான மக்கள் அடைக்கலம் பெற்றுள்ளனர். இதில் சிலர் இரண்டு நாட்களுக்கு மேல் பயணித்து போலந்தை அடைந்திருப்பதோடு, ஏனையோர் எல்லையில் இருக்கும் 15 கிலோ மீற்றர் நீண்ட வரிசையில் இணைந்துள்ளனர்.

60 மற்றும் 18 வயதுக்கு இடைப்பட்ட அனைத்து ஆண்களும் நாட்டில் தங்கி போராடுவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கும் நிலையில் பெரும்பாலும் பெண்கள் மற்றும் சிறுவர்களே நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். சில சந்தர்ப்பங்களில் ஆண்கள் தமது குடும்பத்தில் இருந்து பிரிக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. உக்ரைனில் இருந்து இதுவரை 200,000க்கும் அதிகமானவர்கள் நாட்டை விட்டு வெளியேறி இருப்பதாகவும் மேலும் 850,000 பேர் வரை நாட்டுக்குள் இடம்பெயர்ந்து இருப்பதாகவும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் பிரதி உயர் ஸ்தானிகர் கெல்லி கிளெமெட்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

பேஸ்புக், ட்விட்டர், யூடியுப் நிறுவனங்களுக்கு நெருக்கடி

அமெரிக்காவின் பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள், உக்ரைன் விவகாரம் குறித்து முடிவெடுக்க சிரமப்படுவதாக நம்பப்படுகிறது.

பேஸ்புக், ட்விட்டர், யூடியுப் போன்ற பிரபலமான சேவைகள் ரஷ்யாவுக்கு எதிராகத் தடைகளை விதிக்க வேண்டும் என்று மேற்குலக நாடுகள் நெருக்குதல் அளிக்கின்றன.

இருப்பினும் அத்தகைய தடைகள் அவற்றின் வருமானத்தைப் பெரிய அளவில் பாதிக்கலாம் என்று நிறுவனங்கள் அஞ்சுகின்றன. ரஷ்யா அதன் அண்டை நாடான உக்ரைன் மீது 4 நாட்களுக்கு முன்னர் படையெடுத்தது. அதையடுத்து, ஆப்பிள், கூகுள், நெட்பிளிக்ஸ் போன்ற நிறுவனங்களிடம் ரஷ்யாவுக்குச் சேவைகள் வழங்குவதை நிறுத்தும்படி உக்ரைன் கேட்டுக்கொண்டது.

இந்நிலையில், ரஷ்யாவில் அதன் சேவைகள் கட்டுப்படுத்தப்படுவதாய் ட்விட்டர் தெரிவித்தது. மேற்கத்தேய நாடுகளின் சில நிறுவனங்கள், ரஷ்யர்கள் உண்மையான தகவல்களைப் பெறும் வாய்ப்பை அளித்துவருவது சுட்டிக்காட்டப்பட்டது.

அதன் செயல்கள் குறித்து ரஷ்ய மக்கள் தெரிந்து கொள்வதைத் தடுக்க, ரஷ்ய அரசாங்கம் இணையத்தில் பகிரப்படும் தகவல்களை முடக்குவதில் தீவிர முயற்சிகளில் ஈடுபடுவதாக நம்பப்படுகிறது.

ரஷ்யப் படையை குழப்ப வீதி சமிக்ஞைகள் மாற்றம்

ரஷ்ய படைகளுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் அனைத்து வீதி சமிக்ஞைகளையும் அகற்றியதாக கட்டடம் மற்றும் வீதிப் பராமரிப்புக்கு பொறுப்பான உக்ரைனிய உக்ரவ்டொடோர் நிறுவனம் அறிவித்துள்ளது.

'எதிரிகளின் தொடர்பாடல் மோசமாக உள்ளது. அவர்களால் நிலப்பரப்பில் பயணிக்க முடியாதுள்ளது' என்று அந்த நிறுவனம் தனது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது. 'அவர்கள் நேராக நரகத்திற்குச் செல்ல நாம் உதவுகிறோம்' என்று அது கூறியுள்ளது.

இதில் அருகில் உள்ள நகரங்களை குறிக்கும் வீதி சமிக்ஞை பலகைகளில் ரஷ்யப் படைக்கு எதிரான அவதூறான வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளன.

அதேபோன்று எதிரிகளை தடுப்பதற்கு டயர்களை எரிப்பது, மரங்களை வெட்டிப் போடுவது, தடுப்புகளை அமைப்பது உட்பட முடியுமான அனைத்தையும் செய்யும்படியும் அந்த நிறுவனம் உக்ரைன் மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

'ஆக்கிரமிப்பாளர்கள் தாம் இங்கு எதிர்பார்க்காத வகையில் ஒவ்வொரு வீதியிலும் எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டும்' என்றும் அது கூறியுள்ளது.

உக்ரைனுக்கு ஆயுத உதவிகள் குவிகிறது

உக்ரைனுக்கு நேரடியாக ஆயுதங்களை வழங்குவதாக ஜெர்மனி அரசதுறை தலைவர் ஒலாப் ஸ்கோல்ஸ் அறிவித்துள்ளார்.

இதன்படி 1,000 டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் 500 ஸ்டிங்கர் வகை ஏவுகணைகளை ஜெர்மனி அனுப்பவுள்ளது.

போர் பகுதிகளுக்கு ஜெர்மனி தயாரிப்பு ஆயுதங்களை அனுப்புவதற்கு உள்ள சில கட்டுப்பாடுகளையும் ஜெர்மனி தளர்த்தியுள்ளது. இதனால் மூன்றாவது நாடாக உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்க ஜெர்மனிக்கு முடியுமாகியுள்ளது.

உக்ரைனுக்கு டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களை வழங்கவிருப்பதாக நெதர்லாந்தும் அறிவித்துள்ளது. 50 பன்சர்போஸ்ட்–3 டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் 400 ரொக்கெட்டுகளை வழங்குவதாக நெதர்லாந்து அரசு அந்நாட்டு பாராளுமன்றத்திற்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் அதன் மேற்குலகக் கூட்டணி உக்ரைன் இராணுவத்தை பலப்படுத்தும் முயற்சியாக ஆயுதங்களை வழங்குவதை அதிகரித்து வருகிறது. இவ்வாறு அமெரிக்கா எதிர்வரும் நாட்களில் அதிக உதவிகளை அளிக்கும் என்று பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் படைக்கு 350 மில்லியன் டொலர் மேலதிக இராணுவ உபகரணங்களை அமெரிக்கா வழங்கும் என்று அந்நாட்டு இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் கடந்த சனிக்கிழமை குறிப்பிட்டார்.

பெலாரஸில் ரஷ்யாவுடனான பேச்சுக்கு உக்ரைன் மறுப்பு

உக்ரைனுடன் வெளிப்படையான பேச்சுவார்த்தைக்கு தமது தூதுக்குழு ஒன்று பெலாரஸ் நாட்டை சென்றடைந்திருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

எனினும் இந்த அழைப்பை நிராகரித்திருக்கும் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி, பெலாரஸில் இருந்து உக்ரைன் மீது தாக்குதல் நடத்துவதில்லை என்றால், பெலாரஸில் இந்தப் பேச்சுவார்த்தை சாத்தியமாகி இருக்கும் என்று கூறியுள்ளார்.

எனினும், வேறு இடத்தில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

'உண்மையில் எமக்கு அமைதி வேண்டும். நாம் சந்திப்பை ஏற்படுத்த வேண்டும், நாம் போரை முடிவுக்குக் கொண்டவர வேண்டும். வார்சோ, ப்ராடிஸ்லாவா, புடபாஸ்ட், ஸ்தான்பூல், பகுவில் (பேச்சுவார்த்தைக்கு) நாம் ரஷ்யர்களை அழைக்கிறோம்.

எம்மீது ஏவுகணை வீசாத வேறு எந்த நகரும் கூட எமக்கு பொருத்தமானது. போரை முடிவுக்குக் கொண்டுவரும் உண்மையான மற்றும் கௌரவமான பேச்சுவார்த்தைக்கு இதுவே ஒரே வழி' என்றும் உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பெலாரஸின் உக்ரைன் நாட்டு எல்லையில் ரஷ்ய துருப்புகள் குவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கின் குரல்

மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கொவிட்19 மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியை இது வரை பெற்றுக் கொள்ளாதவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி டாக்டர் ஜ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களின் வீதம் குறைவாக காணப்படுவதால் பைஸசர் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

ஏப்ரல் மாதம் முதல் தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்படவுள்ளதால் அரச உத்தியோகத்தர்கள், வெளி இடங்களில் இருந்து வருபவர்கள், வியாபார நிலையங்களில் உள்ளவர்கள் மற்றும் பொது இடங்களில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் ஆகியோர் தவறாமல் தப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார். தற்போது இராணுவத்தினரால் கிராம சேவகர் பிரிவுகள் தோறும் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும், இது வரை பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக தங்களுக்கான தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

இரண்டாவது தடுப்பூசி பெற்று 03 மாதங்கள் பூர்த்தியானவர்கள் இது வரை மூன்றாவது தடுப்பூசியை பெற்று கொள்ளாத 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

20 தொடக்கம் 29 வயதுக்குட்பட்டவர்கள் இதுவரை எவ்வித தடுப்பூசியும் பெற்றுக் கொள்ளாதவர்கள் தத்தமது பிரிவிலுள்ள சுகாதார வைத்தியதிகாரி காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

கலையரசன எம்.பி திருமலை ஆயருக்கிடையில் சந்திப்பு

(மணல்சேனை நிருபர்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் மற்றும் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இமானுவேல் கிறிஸ்டினுக்கிடையிலான சந்திப்பொன்று சனிக்கிழமை (26) திருகோணமலை ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன், சமூக செயற்பாட்டாளர் பிரதீபன் மற்றும் திருகோணமலை தளம் அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டிருந்தனர். இச்சந்திப்பில் திருகோணமலை மாவட்ட நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், கிழக்கு மாகாணத்தின் நிலைமைகள், தற்போது நிலவும் அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மஹா சிவராத்திரி விரதம் நாளை

(காரைதீவு குறூப் நிருபர்)

சைவசமயிகள் தமது முழுமுதற் கடவுளான சிவனை அனுஸ்ட்டிக்கும் மஹா சிவராத்திரி விரதம் நாளை செவ்வாய்க்கிழமை (1) ஆகும்.

அதனையொட்டி சைவசமயிகள் வாழும் பட்டி தொட்டியெல்லாம் மஹா சிவராத்திரிக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. குறிப்பாக சிவாலயங்களில் சிறப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை சித்தர்களின் குரல் அமைப்பினர் சிவராத்திரியையொட்டி, பக்தர்களுக்கு விநியோகிக்கும் பொருட்டு 20ஆயிரம் உருத்திராட்சை மாலைகளை தயார்படுத்தியுள்ளார்.

சித்தர்கள் குரல் அமைப்பின் மேலாளர் சிவசங்கர் ஜீ தலைமையில் மகேஸ்வரன் ஜீயின் பங்கேற்புடன், இவ் உருத்திராட்சை மாலைகள் நேற்றுமுன்தினம் வரை மட்டு. நகரில் தயார் படுத்தப்பட்டன.

பயங்கரவாத தடை சட்டத்தை இரத்து செய்யகோரி கையெழுத்து போராட்டம்

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி திருகோணமலையில் கையெழுத்து போராட்டமொன்று சைனிக்கிழமை (26) முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட வாலிபர் முன்னணி ஏற்பாடு செய்த இக் கையெழுத்து போராட்டம், திருகோணமலை சிவன் கோயிலடி தந்தை செல்வா உருவ சிலைக்கு முன்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், கலையரசன் மற்றும் திருகோணமலை மாவட்ட தலைவர் குகதாசன் என பலர் கலந்து கொண்டனர். இதேவேளை இலங்கை தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணியினால் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பிலான துண்டு பிரசுரங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி அதற்கு பதிலாக சர்வதேச மனித உரிமைகள் தர நிலைகளுக்கு அமைவாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வருவதற்கு இலங்கை உறுதி அளித்திருந்தது.

2018 இல் ஒரு சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தால் கிடப்பில் போடப்பட்டது.

இருப்பினும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நிறுத்துவதாக ஜனவரி 27ஆம் திகதி அதன் திருத்தத்திற்கான சட்டமூலத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. பயங்கரவாத தடை சட்டத்தை முழுமையாக நீக்குவதாக தாம் வழங்கிய வாக்குறுதியை இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்க வலியுறுத்துமாறு, சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குடிநீர் இணைப்பு வழங்கும் நிகழ்வு

(ஒலுவில் கிழக்கு திணகரன் நிருபர்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சமூக நேயன் சஹிட் எம்.ரிஸ்மியின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கு அமைவாக 2ஆம் கட்டம் இலவச குடிநீர் இணைப்பு வழங்கும் நிகழ்வு அண்மையில் அட்டாளைச்சேனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் முகம்மது றியாஸின் நெறிப்படுத்தலின் கீழ் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ.செயலாளர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். கியாஸ்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ.பிரதம ஆலோசகர் ஓய்வு பெற்ற கவ்விப் பணிப்பாளர் எஸ்.எல்.ஆதம்பாவா பிரதம அதிதியாகவும், சம்மாந்துறை வை.எம்.எம்.ஏ. தலைவர் ஐ.எல்.சம்சுதீன், அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. பொருளாளர் ஆசிரியர் ஏ.எம்.சுலைமாலெப்பை ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டு நீர் இணைப்புத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தனர்.

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட 74 பயனாளிகளுக்கு அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. இன் ஏற்பாட்டில் புதிய நீரிணைப்பு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

களுதாவளையில் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுப்பு

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட கிராமங்களில் நடமாடும் தடுப்பூசி நிலையங்கள் அமைக்கப்பட்டு, தடுப்பூசி ஏற்றும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணனின் ஆலோசனை, வழிகாட்டலுக்கமைய மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். யோகேஸ்வரனின் ஒழுங்கமைப்பில் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் தடுப்பூசி ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (27) களுதாவளை கலாசார மண்டபத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டன. கொவிட் 19 தடுப்பூசி ஏற்றும் பணியை பூர்த்தி செய்ய இது ஒரு பொன்னான சந்தர்ப்பம் எனும் தொனிப்பொருளில் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு நடைபெற்றது.

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் இதுவரை 95 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் முதலாவது தடுப்பூசியினை பெற்றுக்கொண்டுள்ளனர். இதேவேளை பூஸ்டர் தடுப்பூசியினை 31 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதுவரை செலுத்திக் கொண்டுள்ளனர்.

கல்முனையில் டிஜிட்டல் அறிவை மேம்படுத்தும் வேலைத்திட்டம்

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

பெண் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெண் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் டிஜிட்டல் அறிவினை மேம்படுத்துவதற்கான "ஜனனி" திட்டத்தினை கபே அமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் முன்னெடுத்து வருகின்றன.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்திற்கான முதலாம் கட்ட நிகழ்வு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) தேசிய நிறைவேற்று பணிப்பாளர் தலைமையில் கல்முனையில் சனிக்கிழமை (26) இடம்பெற்றது .

இதன் போது வளவாளராக மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எம்.பி.எம் சுபியான், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடக செயலாளர் சிரேஸ்ட ஊடகவியலாளர் ஜெ.யோகராஜ் , விடியல் இணையத்தள பிரதம ஆசிரியர் ஊடகவியலாளர் ரிப்தி அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் டிஜிட்டல் கல்வியறிவினை மேம்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களின் முக்கியத்துவம், தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் ஊடக கோட்பாடுகள் தொடர்பில் வளவாளர்களினால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி கௌரவிப்பு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால், மருத்துவ பீடத்துக்கு தெரிவான கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி ஸனூஸ் பாத்திமா நுஹா பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் பிள்ளைகள் சிறந்த அடைவு மட்டத்தை அடையும் போது, அவர்களை கௌரவித்தல் திட்டத்தின் கீழ், முதல் தடவையாக இந் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

டாக்டர் ஜீவா சிவசுப்ரமணியம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், மாணவியின் பெற்றோர், வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

வைத்தியசாலை தாதிய பரிபாலகர் பீ.எம்.நஸீறுதீன் இந்நிகழ்வை நெறிப்படுத்தியிருந்தார்.

அல்லைக் குளத்தில் முதலைகள் தொல்லை

தோப்பூர் குறூப் நிருபர்

9. விலைகூறல் முடிவடைவதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்துக்குக் குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரே பாதுகாப்புச் சோதனைகளின் நிமித்தம் ''செத்சிறிபாய'' வளவுக்குள் வந்துவிடுமாறு விலைகூறுநர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பொறி. எம்.எச்.எம். இஸ்மயில்,
கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,
கட்டிடங்கள் திணைக்களம்,
2ம் மாடி, ''செத்சிறிபாய'',
பத்தரமுல்லை.
www.buildings.gov.lk

POONAKARY PRADESHIYA SABHA, KILLINOCHCHI DISTRICT

LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP) - LOAN NUMBER: P163305

INVITATION FOR BIDS (IFB)

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this loan to payments under the Contract for **Construction of Shopping Complex at Vaadiyady Junction (Stage I).**

02. The Chairman, Local Authority Project Procurement Committee (LAPPC) on behalf of the Poonakary Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **Construction of Shopping Complex at Vaadiyady Junction (Stage I)** as described below.

No.	Contract No.	Contract Name	Tentative Estimated Cost (Rs. Mn)	Required Minimum CIDA Grade	Contract Period
01	LDSP/NP/KN/POPS/2022/01	Construction of Shopping Complex at Vaadiyady Junction (Stage I)	11.68	C6	147 Days

03. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

04. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Building Construction** for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

05. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

06. Interested bidders may obtain further information from **Chairman, Poonakary Pradeshiya Sabha, Vaadiyady, Poonakary, Kilinochchi** (T.P No: 0212282666, Fax No: 0212060855) and inspect the bidding documents at the address given below from **28th February 2022** until **27th March 2022** between **09:00** Hrs and **15:00** Hrs on normal working days.

07. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Poonakary Pradeshiya Sabha, Vaadiyady, Poonakary, Kilinochchi** from **28th February 2022** until from **27th March 2022** between **09:00** Hrs and **15:00** Hrs on normal working days upon payment of a non-refundable fee of **Four Thousand Rupees** (**Rs.4,000.00**). The method of payment will be by cash.

08. Bids shall be delivered in duplicate to the address below **Chairman, Local Authority Procurement Committee, Poonakary Pradeshiya Sabha, Vaadiyady, Poonakary, Kilinochchi** at or before **14.00** Hrs on **28th March 2022**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

09. Bids shall be valid up to **13th June, 2022.** All bids shall be accompanied by a Bid-Security of **Rs.200,000.00.** Bid Security shall be valid up to **11th July, 2022**.

10. A pre-bid meeting will be held at 11.00 Hrs on **21st March 2022** at **Poonakary Pradeshiya Sabha, Vaadiyady, Poonakary, Kilinochchi**.

Chairman,
Local Authority Procurement Committee (LAPC)
Poonakary Pradeshiya Sabha,
Vaadiyady, Poonakary,
Kilinochchi.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணங்கள் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

கட்டிடங்கள் திணைக்களம்

விலைமனுக்களுக்கான அழைப்பு

கொழும்பு 05, நாராஹேன்பிட்ட, தொழில் திணைக்களம் 'மெஹெவர பியச' கட்டிடம், 4ஆம் மாடியில் உணவகத்தின் உள்ளக வேலைகள்
(ஒப்பந்த இல. 04-03-10-2022/CT33)

1. கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கொழும்பு -05 நாராஹேன்பிட்ட, தொழில் திணைக்களம், 'மெஹெவர பியச' கட்டிடம், 4ம் மாடியில் உள்ள உணவகத்தின் உள்ளக வேலைகளுக்கு தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை கட்டிடத்திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகை குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார். அத்துடன் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 56.7 மில்லியன் ஆகும். ஒப்பந்த காலம் 120 நாட்களாகும்.
2. விலைமனுக்கள் தேசிய போட்டி கேள்வி முறைமையின் ஊடாக நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம் பெறாது இருத்தல் வேண்டும். அத்துடன் தரம் C4 அல்லது C3 இற்கு கட்டிட நிர்மாணத் துறையில் பதிவு அல்லது SP 01 தரத்திற்கு விசேட நிர்மாணத்தில் பதிவைக் கொண்டிருத்தல் அத்துடன் வழங்கப்படும் நாளில் பதிவு செல்லுபடியாகுமாறு விலைமனு மூடப்படும் நாளில் செல்லுபடியாகும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA)யில் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள தரத்திற்கு கட்டிட நிர்மாணத் துறையில் பதிவு செய்திருத்தல் வேண்டும். 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த சட்ட இல. 03 இன் விதிகளின் கீழ் இலங்கை பொது ஒப்பந்த பதிவாளரிடம் தாமாகவே மனுதாரர் பதிவு செய்திருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவின் மூலச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. எந்த வேலை நாட்களிலும் 9.00 மணிமுதல் 16.00 மணி வரை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு கொழும்பு -07 டொரிங்டன் அவெனியூ, 213, கட்டிடங்கள் திணைக்களம் சிரேஷ்ட பொறியியலாளர் அலுவலகம், பிரதம பொறியியலாளர் இடமிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு இலக்கங்களாவன தொ.பே. 011-2554691 பெக்ஸ் 011-2554690
5. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில் 2022.03.02 முதல் 2022.03.23 வரை கொழும்பு -07 டொரிங்டன் அவென்யூ, 213, கட்டிடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் பணிமனை, பிரதம பொறியியலாளர் இட்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஓர் மீளளிக்கப்படாத ரூபா பதின் மூன்றாயிரம் (ரூ. 13,000/-) செலுத்துவதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலானு ஓர் முழுமையான தொகுதி விலைமன ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
6. 2022.03.24 திகதி 10.00 மணிக்கு அல்லது அதற்க முன் கிடைக்குமாறு பத்தரமுல்ல, 'செத்சிரிபாய', 2ஆம் மாடி, கட்டிடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் அலுவலகம், பெறுகை குழு தலைவருக்கு கிடைக்குமாறு விலைமனுக்கள் விநியோகிக்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பலாம். விலைமனுக்கள் சமுகமளிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் அதே முகவரியில் விலைமனுக்கள் மூடப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து91 நாட்கள் கொண்ட ஓர் கால எல்லைக்கு அல்லது இந்த நீடிக்கப்படும் கால எல்லைக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. பின்வருவனவற்றைக் கொண்ட ஓர் விலைமனுப் பிணையை எல்லா விலைமனுவுடனும் இணைத்தல் வேண்டும்.
   - விலைமனு ஆவணத்தின் பிரிவு 09இல் உள்ளடக்கப்பட்டுள்ள படிவம்
   - கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில்
   - ரூ. 850,000.00 தொகையில்
   - 2022.07.20 வரை செல்லுபடியாகும்.
   - அட்டவணையின் உட்கூறு 16.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரகம் ஒன்றினால் வழங்கப்படும்.
9. பாதுகாப்பு பரிசீலனைக்காக விலைமனு மூடப்படும். குறித்த நேரத்திற்கு குறைந்தபட்சம் 1 மணித்தியாலத்திற்கு முன்பு 'செத்சிரிபாய' வளாகத்திற்கு பிரவேசிக்குமாறு விலைமனுதாரர்கள் அறிவுருத்தப்படுகின்றனர்.

பொறியியலாளர் M.H.M. இஸ்மாயில்,
கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,
கட்டிடங்கள் திணைக்களம்,
2ஆம் மாடி, 'செத்சிரிபாய',
பத்தரமுல்ல.
www.buildings.gov.lk

இலங்கை புகையிரத சேவைகள்

விலைமனு நீடித்தல் அறிவித்தல்கள்

பின்வரும் பெறுகை தொடர்பாக பத்திரிகை விளம்பரங்களில் பிரசுரிக்கப்பட்ட விலைமனுவின் விலைமனுக்கோரல் ஆவணத்தின் வழங்கும் இறுதி திகதி மற்றும் மூடும்/திறக்கும் திகதிகள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளன.

பெறுகை இல.	விளக்கம்	புதினப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட திகதி	வழங்கும் இறுதித் திகதி	மூடும்/ திறக்கும் திகதி	விலைமனு முன்னோடிக் கூட்ட திகதி
SRS/F.7820	இலங்கை புகையிரத சேவையின் 10 புகையிரத நிலையங்கள் அடங்கலாக 12 அமைவிடங்களில் சுகாதார துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல்	2022.02.15 ஆம் திகதியன்று	2022.03.22 ஆம் திகதியன்று	2022.03.23ஆம் திகதியன்று	2022.03.08 ஆம் திகதியன்று
SRS/F.7824	கொழும்பு கோட்டை மற்றும் மருதானை புகையிரத நிலையங்களுக்காக 450 பயணிகளுக்கான வாங்குகளின் பெறுகை	2022.02.15 ஆம் திகதியன்று	2022.03.22 ஆம் திகதியன்று	2022.03.23ஆம் திகதியன்று	2022.03.08 ஆம் திகதியன்று

விலைமனுக்களுக்கான அழைப்பு மற்றும் இடம் மற்றும் ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

மேலதிக விபரங்கட்கு தயவு செய்து பின்வருவனவற்றினூடாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்: 011-2438078/2436818
தொலைநகல் இலக்கம்: 011-2432044
மின்னஞ்சல்: **tender2@railway.gov.lk/srs.slr@gmail.com**
இணையதளம்: **www.railway.gov.lk**

தலைவர்,
செயற்றிட்ட பெறுகைக்குழு,
இலங்கை புகையிரத சேவைகள்.

போதனா வைத்தியசாலை - களுத்துறை

விலைக்கோரல் அழைப்பு

வளிச்சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் – 2022

களுத்துறை - போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் வைத்தியசாலையில் பொருத்தப்பட்டுள்ள 124 வளிச்சீராக்கி இயந்திரங்களுக்கு 2022ஆம் வருடத்தில் சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரிப்பதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

வளிச்சீராக்கி இயந்திரங்களின் கொள்ளளவு	வளிச்சீராக்கி இயந்திரங்களின் எண்ணிக்கை
9000 BTU	01
12000 BTU	39
18000 BTU	22
24000 BTU	59
36000 BTU	03

- மேற்படி இயந்திரங்களின் சேர்விஸ் மற்றும் பராமரித்தலுக்கான விலைக்கோரல் ஆவணங்களை களுத்துறை போதனா வைத்தியசாலை தலைமை அலுவலகத்திலிருந்து 2022-03-02ஆம் திகதி முதல் 2022-03-21ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
- ஒரு ஆவணத்திற்காகவும் மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா விலைக்கோரல் ஆவணக் கட்டணம் அறவிடப்படும்.
- ICTAD EM5 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவைக் கொண்டவர்கள் மட்டுமே விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் போது இயைபுடைய ஆவணங்களின் மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- 2022-03-22ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதால் அன்றைய தினம் மு.ப. 10.00 மணிக்கு முன் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, களுத்துறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
- 2022-03-22ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 034 - 2222261/62 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
போதனா வைத்தியசாலை, களுத்துறை.

பெறுகை அறிவித்தல்

ஆயுர்வேத நிலையத்தை நடாத்திச் செல்வதற்கு கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளல்

01. பொரலஸ்கமுவ நகர சபையின் ஆயுர்வேத நிலையத்திற்காக பொருத்தமான கட்டிடமொன்றை பொரலஸ்கமுவ நகர எல்லைக்குள் வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
02. கட்டிட இடப்பரப்பு பின்வரும் தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.
    i. முன்வைக்கப்படும் கட்டிடத்தின் உட்புறம் ஏறத்தாழ 1250 - 1400 சதுர அடி இடப்பரப்பைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஆயுர்வேத நிலையத்தை நடாத்திச் செல்வதற்குப் பொருத்தமான சூழலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    ii. குறைந்தபட்சம் 02 வருட காலத்திற்கு கட்டிடத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.
    iii. வழங்குவதற்கு எதிர்பார்க்கும் கட்டிட வளாகத்திற்கு வேறான மின்சார மற்றும் நீர் வசதிகள் இருத்தல் வேண்டும்.
    iv. பணியாட்தொகுதியினர் மற்றும் வருகை தரும் பொதுமக்களுக்குப் போதுமான அளவில் மலசலகூட வசதிகள் இருத்தல் வேண்டும்.
    v. வாகனங்கள் தடையின்றி பிரவேசிக்கக்கூடிய பாதை இருத்தல் வேண்டும்.
    vi. உங்கள் விலைகளுடன் கட்டிடத்தில் உள்ள வரைபடம் மற்றும் நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்கள் தொடர்பான தகவல்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. மேற்படி தேவைப்பாடுகளுக்குப் புறம்பாக பின்வரும் வசதிகள் சகிதமான கட்டிடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
    i. மாடிக் கட்டிடமானால் தரை மாடி மிகவும் பொருத்தமானதாகும்.
    ii. நுழைவாயிலை மூடி வைக்கும் வகையில் படலையொன்று இருத்தல் மற்றும் கட்டிட வளவு பாதுகாப்பாக பூட்டி வைக்கும் வகையில் இருத்தல் வேண்டும்.
    iii. பொரலஸ்கமுவ நகரத்திலிருந்து 2 கி.மீற்றருக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.

    மேற்படித் தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை இரு பிரதிகளில் தயாரித்து வெவ்வேறு உறைகளில் இட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்து 2022-03-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் தலைவர், பொரலஸ்கமுவ நகர சபை, பொரலஸ்கமுவ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் ''ஆயுர்வேத நிலையமொன்றை நடாத்திச்செல்வதற்கு கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்ளல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
04. அன்றைய தினமே பி.ப. 2.05 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
05. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
06. கட்டிடத்தை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவத்தை மீளளிக்கப்படாத 500.00 ரூபா படிவக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம். வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும்.

அலுவலக நாட்களில் 0112517480 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தேசபந்து கே.டி.ஏ.பி. ஷாந்த,
தலைவர்,
பொரலஸ்கமுவ நகர சபை,
பொரலஸ்கமுவ.

பெறுகை அறிவித்தல்

''முன்மொழியப்பட்ட மன்னார் 11ஆம் கட்ட காற்றலை மின் திட்டத்திற்கு சூழல் தாக்க மதிப்பீட்டை (EIA) நடாத்துவதற்கு'' ஆலோசனை நிறுவனமொன்றைத் தெரிவு செய்தல்

விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை

பெறுகை இல. SEA/PD/RND/07-2022

பணியின் நோக்கம் மற்றும் பின்புலம்

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்டுள்ள ''மன்னார் மாவட்டத்திலுள்ள மன்னார் தீவில் முன்மொழியப்பட்ட மன்னார் 11ஆம் கட்ட காற்றலை மின் திட்டத்திற்கு சூழல் தாக்க மதிப்பீட்டை (EIA) நடாத்துவதற்கு'' ஆர்வமுள்ள உள்நாட்டு நிறுவனங்களை முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை (SLSEA) அழைக்கின்றது. இதன் ஆரம்ப செயற்றிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் என்பதுடன் இது தனியார் துறை முதலீடுகள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட அபிவிருத்தியாளரால் ஒரு சுயாதீன மின் உற்பத்தியாளர் (IPP) திட்டமாக செயற்படுத்தப்படும்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து இந்த செயற்றிட்டத்திற்குத் தேவையான சுற்றாடல் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதால், மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட குறிப்பீட்டு விதிகளின் (ToR) பிரகாரம் சூழல் தாங்க மதிப்பீட்டை மேற்கொள்ளல் வேண்டும்.

இந்த குறித்த பணி பின்வரும் பகுதிகளை உள்ளடக்குதல் வேண்டும்.

அ) ஆய்வுகள் தொடர்பான தரவுகளைச் சேகரிக்க வேலைத்தள விஜயங்களை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் ஆய்வுப் பகுதியின் அடிப்படை சுற்றாடல் நிலையை நிலைநிறுத்துவதற்காக இரண்டாம் நிலை தரவையும் சேகரித்தல் வேண்டும்.
ஆ) முன்மொழியப்பட்ட திட்டத்தின் நிர்மாணம் மற்றும் செயற்பாட்டின் காரணமாக சுற்றாடல் பண்புகளில் ஏற்படும் தாக்கத்தை மதிப்பிடுதல்.
இ) வீதி வலையமைப்பு, மின்சாரத்தை வெளியேற்றும் கேபிள் வலையமைப்பு போன்றவற்றை உள்ளடக்கிய மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விரிவான வடிவமைப்பு மற்றும் நுண்-உள்ளமைவுகளை சரிபார்த்தல் மற்றும் தேவையான இடங்களில் மாற்று வழிகளை முன்மொழிவதுடன் பரிந்துரைகளையும் செய்தல்.
ஈ) முன்மொழியப்பட்ட திட்டத்தை செயல்படுத்திய பின் கண்காணிக்கப்பட வேண்டிய முக்கியமான சுற்றுச்சூழல் பண்புகளை அடையாளம் காணுதல்.
உ) நிறுவன ஏற்பாடு மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு உள்ளிட்ட சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான சுற்றுச்சூழல் முகாமைத் திட்டத்தைத் தயாரித்தல்.
ஊ) திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்தை அடையாளம் காண உள்ளூர் மக்களின் ஆலோசனையை பெறல்
எ) வட்டாரத்தில் தொடர்புடைய அரசு அதிகாரிகளின் ஆலோசனையை பெறல்.
ஏ) திட்ட ஒப்புதல் முகவரகத்தினால் அழைக்கப்படும் சுற்றாடல் தாக்க மதிப்பிட்டுக் கூட்டங்கள் மற்றும் TEC கூட்டங்களில் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.
ஐ) சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயல்முறையின் பொது விசாரணையின் போது எழுப்பப்பட்ட பொதுமக்களின் கருத்துகளுக்கு தீர்வு காணுதல்.
ஒ) இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைக்கு இறுதி சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பித்தல்.

விலைக்கோரல் செயல்முறையின் அறிவிப்பு

1. விலைக்கோரல்கள் 2006ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் பணியின் மேலதிக விபரங்கள் ''RFP ஆவணத்தில்'' தரப்பட்டுள்ளன. அதை SLSEA இணையதளத்தின் ஊடாக http://www.energy.gov.lkiindex.php/en/procurement எனும் லிங்கை பின்பற்றி பார்வையிடலாம்/ தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.
2. தங்கள் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க விரும்பும் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ''RFP ஆவணங்களை'' இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் "www.energy.gov.lk" இணையதளத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து தரவிறக்கம் செய்து கொள்வனவு செய்யலாம். கீழே தரப்பட்டுள்ள இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் பொதுக் கணக்கிலத்திற்கு நிறுவனத்தின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு மீளளிக்கப்படாத 3,000.00 இல. ரூபா கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். வைப்புப் பற்றுச்சீட்டை procurement.slsea@gmail.com மற்றும் slseafinance@gmail.com. எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மேற்படி கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விலைமனுவுடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். கொடுப்பனவு பற்றுச்சீட்டு இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
3. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022-03-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிகழ்நிலை (online) ஊடாக இடம்பெறும், வளமுள்ள விலைமனுதார்கள் இதை புரிந்துகொள்ள வேண்டும். விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் இணைந்துகொள்ள ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் procurement.slsea@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு வேண்டுகோள் ஒன்றை அனுப்பி கூட்டத்திற்கான இணைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
4. தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் நிதியியல் முன்மொழிவுகளை வெவ்வேறாக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறைகளில் இட்டு பின் இன்னொரு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையில் இட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் ''முன்மொழியப்பட்ட மன்னார் 11ஆம் கட்ட காற்றலை மின் திட்டத்திற்கு சூழல் தாக்க மதிப்பீட்டை (EIA) நடாத்துவதற்கு'' ஆலோசனை நிறுவனமொன்றைத் தெரிவு செய்தல்'' எனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறைகளை 2022-03-21ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பெறுகைப் பிரிவு, இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை, இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-7 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் நிதியியல் முன்மொழிவுகளை வெவ்வேறாகச் சமர்ப்பிக்காத முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும்.
5. விலைமனுக்கள் கொழும்பு-7, இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை அறையில் முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும்.
6. மேலதிக விபரங்களை இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் பெறுகைப் பிரிவிலிருந்து சாதாரண அலுவலக நேரங்களில் 0112575203/ 0112575030/ 0112575036 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக மற்றும் procurement.slsea@gmail.com. எனும் முகவரிக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.
7. சகல விலைமனுக்களுடனும் 2022-06-20ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் 100,000.00 இல. ரூபாவுக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கணக்கு விபரங்கள் பின்வருமாறாகும்.
வங்கி - இலங்கை வங்கி,
கிளை - 453 - டொரிங்டன் சதுக்கம்
கணக்கிலக்கம் - 0074944408

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை,
இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,
கொழும்பு 07.
2022-02-26.

முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம்: 2022-03-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு

1964 இலக்கம் 28இக் காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. :-வீ/அபி/கா/3/CEP(மேலதிக)
காணி அமைச்சின் குறிப்பு இல. :-4-3/7/2020/எச்டப்ளிவ்/123

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 2022.01.31ஆம் திகதிய 2265/17 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

அட்டவணை

மாகாணம் : மேல்
மாவட்டம் : கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு : மஹர

ஆ.வ. இலக்கம்/ கடத்திரல் இலக்கம்	துண்டு இல.	விஸ்தீரணம் (ஹெக்டயார்)	கிராமம்	கிராம நிலதாரி பிரிவு
510821/01/11	08	0.0414	சூரியபாலுவ	பிரிவு இல. 245ஏ, சூரியபாலுவ தெற்கு
510810/06/20	04	0.0299	சூரியபாலுவ	பிரிவு இல. 245, சூரியபாலுவ வடக்கு
510820/05/15	09	0.0739	சூரியபாலுவ	பிரிவு இல. 245பீ, சூரியபாலுவ கிழக்கு

பிரதேச செயலாளர் காரியாலயம்,
மஹர,
2022.02.22

ஜீ.எஸ்.ஐ. விமலசேன,
பிரதேச செயலாளர்,
மஹர

மேல் மாகாண மேல் நீதிமன்றம் - கொழும்பு 12

விலைமனுக்களுக்கான அழைப்பு

சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குதல் - 2021/2022

கொழும்பு மேல் நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட பின்வரும் நீதிமன்றங்களில் சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குவதற்காக கொழும்பு மேல் நீதிமன்றத்தின் பெறுகைக் குழுவினால் உள்நாட்டு திறந்த விலைக்கோரல் முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1

	Name of Bidder / Name of courts	Estimate Amount (Rs)	Non Refundable Bid Document Fee (Rs)
01	Civil Appeal High Court - Colombo 12.	1,294,800.00	2,500/-
02	Commercial High Court - Colombo 12.	1,563,600.00	2,500/-
03	Court - Complex Nugegoda	1,544,400.00	2,500/-
04	Chief Magistrate Court - Colombo 12.	4,231,200.00	2,500/-
05	Magistrate Court Battaramulla	717,600.00	2,500/-
06	Labour Tribunal - 32 Mount Lavinia	717,600.00	2,500/-

மேற்படி வேலைகள் தொடர்பான சகல விபரங்களையும் விலைமனு ஆவணங்களுடன் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்களை கொழும்பு மேல் நீதிமன்றத்தின் கணக்கிடல் பிரிவிலிருந்து 2022-03-02ஆம் திகதி முதல் 2022-03-18ஆம் திகதி வரையான வேலை நாட்களில் அலுவலக நேரத்தினுள் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை) பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட 2022-03-21ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் பிரதான பதிவாளரை 011-2438893 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ளவும். இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் மற்றும் நிராகரிக்கும் உரிமையை பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
மேல் நீதிமன்றம்,
கொழும்பு 12.

விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை போக்குவரத்து சபை (இபோச)

Supply and delivery of pre-cured Tread Liners, Bonding Gum, Gum Solvent (S.B.P.) and related materials to SLTB Ampara Tyre Factory SLTB/TS/GEN/2022/12-1

1. Pre-cured tread liners, Bonding Gum, Gum solvent (S.B.P.) மற்றும் தொடர்பான பொருட்களை இபோச அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ள விபரக்குறிப்புக்களுக்கு உறுதிப்படுத்தும் வகையில் வழங்கக்கூடிய தகுதியுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து 2022.03.21 ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை இபோச உயர்மட்ட பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2022.02.28 ஆம் திகதியிலிருந்து 2022.03.18 ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000 ரூபாவைச் செலுத்திய பின்னர் கொழும்பு-05, கிருள பாதை, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழு செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

விளக்கம்	விலைமனுப்பிணை
Supply and Delivery of Pre-cured tread liners, Bonding Gum, Gum Solvent (S.B.P.) and related materials for SLTB Ampara Tyre Factory, 45 days credit basis as described below. Lot 1 – Pre-cured tread liners, Bonding Gum & Gum Solvent (S.B.P.). Lot 2 – Related materials such as curing envelopes, tubes, flaps buffing blades.	Lot 1 – Rs. 800,000 Lot 2 – Rs. 200,000 Both Lots – Rs1,000,000.

2. தேவைப்படும் Pre-cured tread liners, Binding Gum, மற்றும் ஏனைய தொடர்புள்ள பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கான ISO:9001 தர சான்றிதழைக் கொண்டுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் மாத்திரம் மற்றும் முன்வைக்கப்படும் அம்சங்களை உற்பத்தி செய்யக்கூடிய ISO:9001 சான்றிதழைக் கொண்டுள்ள வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் உள்ளூர் முகவர்கள் ஆகியோர் விலைமனுக்களை முன்வைப்பதற்கான தகுதியைப் பெற்றுக் கொள்வர்.

3. (அ) எந்தவொரு விலைமனுதாரரின் முகவராக, உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரின் சார்பாக செயற்படுபவராகவிருப்பின் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னராக 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்ட பொது ஒப்பந்தங்களுக்கமைவாக இலங்கை பொது ஒப்பந்தங்களின் பதிவாளருடன் அவ்வாறான நபர் பதிவு செய்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான சான்றிதழின் மூலப்பிரதியை சமர்ப்பிப்பதற்கு தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பித்தவுடனேயேயும் ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்ள முன்பும் விலைமனுதாரர்கள் தம்மை பதிவு செய்தல் வேண்டும். உரித்தான பெறுகைக் குழுவிற்கு பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் ஒப்பந்தம் வழங்கப்படமாட்டாது.

4. விலைமனுக்கள் 2022.06.22 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும் முன்வைக்கப்படும் விலைகள் ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

5. விலைமனுக்கள் 2022.07.22 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கானதுமான விலைமனுப்பிணையொன்றுடனும் மத்திய வங்கியில் பதிவு பெற்றதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருப்பதும் இபோச இன் முதல் எழுத்து மூலமான விண்ணப்பத்திலேயே திருப்பப்படாததும் நிபந்தனையற்றதுமான உத்தரவாத அடிப்படையில் விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

6. விலைமனுக்கோரல் ஆவணங்களின் அனைத்துப் பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது இலச்சினை பொறிக்கப்படல் வேண்டும்.

7. விலைமனுக்கள் ஒன்றில் கொழும்பு-05, கிருள பாதை, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022.03.21 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனு அடக்கப்பட்டுள்ள முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Bid for the Supply & delivery of Pre-cured tread liners, Bonding Gum, Gum solvent (S.B.P.) and related materials for SLTB Ampara Tyre Factory"** என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

8. கொழும்பு-05, கிருள பாதை, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தலைவர்,
இபோச பெறுகைக் குழு,
பெறுகைப் பிரிவு,
இலங்கை போக்குவரத்து சபை,
இல.: 200, கிருள பாதை,
கொழும்பு-05.

விசாரணைகள் : செயலாளர், இபோச பெறுகைக் குழு.
தொலைபேசி : 011 7706110 & 0771056110. தொலைபேசி/தொலைநகல்: 011 2588457

கொழும்பு மாநகர சபை

வெற்றிடங்கள் அறிவித்தல்

கொழும்பு மாநகர சபையில் நாளாந்த சேவையை கொள்வனவு செய்யும் அடிப்படையில் தொழிநுட்ப உத்தியோகத்தர்களின்/ மற்றும் படவரைஞர் உத்தியோகத்தர்களின் சேவையை பெற்றுக்கொள்ளல்.

கொழும்பு மாநகர சபையில் மாநகர பொறியியலாளர் திணைக்களத்திற்கு தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் மற்றும் படவரைஞர் உத்தியோகத்தர்களின் நாளாந்த சேவையை கொள்வனவு செய்யும் அடிப்படையில் சேவைகளை பெறுவதற்கு இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்கள் 2022.03.14 ஆம் திகதிக்கு முன்னர் **"மாநகர செயலாளர், கொழும்பு மாநகர சபை, நகர மண்டபம், கொழும்பு 07,"** எனும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடிதயுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். நாட்டில் காணப்படும் கொவிட் தொற்றுநோய் நிலைமையினுள் ஆட்சேர்ப்பு செய்தலை துரிதப்படுத்தும் பொருட்டு, விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மின்னஞ்சல் ஊடாகவும் அனுப்பப்படல் வேண்டும்.

- **dircp@colombo.mc.gov.lk**

1. பதவி : தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் மற்றும் படவரைஞர் உத்தியோகத்தர்களின் நாளாந்த சேவையை கொள்வனவு செய்யும் அடிப்படையில் சேவைகளை பெறுதல்.

2. சம்பள அளவுத்திட்டம் : ஒரு தினத்திற்கு தலா ரூபா 2200.00

3. உடல்ரீதியான தகைமை : பதவியில் கடமை புரிவதற்கு போதிய உடல், உள ஆரோக்கியமுடையவராய் இருத்தல் வேண்டும்.

4. வேறு தகைமைகள் :

I. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. மேல் மாகாணத்தில் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஓய்வுபெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர் (படவரைஞர் சேவை) மற்றும் இலங்கை தொழிநுட்ப சேவை பிரமாணக்குறிப்புக்கு அமைய III ஆம் தரத்திற்குரிய தகைமை பெறும் உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.
III. மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாட் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழிநுட்ப டிப்ளோமா அல்லது,
IV. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா அல்லது,
V. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா அல்லது,
VI. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் முழுநேர ஒருவருட படவரைஞர் பாடநெறியை சிறந்தமுறையில் பூர்த்தி செய்திருத்தல்.
VII. தொழிற்துறையுடன் தொடர்புடையதாக தேசிய தொழில் தகைமை (NVQ) 06 ஆம் மட்டத்தின் தகைமை பூர்த்தி செய்திருத்தல்.
VIII. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்படும் தொழிநுட்ப சான்றிதழ்கள் வழங்கும் நிறுவனங்களிடம் வினவி கருத்துக்களை பெற்றுக்கொண்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்படும் தொழிநுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழிநுட்ப தகைமைகள் பெற்றிருத்தல்.
IX. சிறந்த நன்னடத்தையுடையவராய் இருத்தல் வேண்டும்.
X. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் தேவையான அனைத்து தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
XI. நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டடங்கள் மற்றும் படவரைவு ஒழுங்குவிதிமுறைகள் மற்றும் தகவல் தொழிநுட்ப முறையியல் பற்றிய அறிவு மேலதிக தகைமைகளாகும்.

5. ஆட்சேர்ப்பு முறை:-

மேல் மாகாணத்தில் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஓய்வுபெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கை தொழிநுட்ப சேவை பிரமாணக்குறிப்புக்கு அமைய III ஆம் தரத்திற்குரிய தகைமை பெறும் உத்தியோகத்தர்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

- நேர்முகப் பரீட்சையின் பின்னர் சேவை பெறல் நடைபெறும்.
- நாளொன்றுக்கு ஆகக்குறைந்தது 08 மணித்தியால வேலை.
- முழுநேர அடிப்படையில் கடமையில் ஈடுபட வேண்டும்.
- வார இறுதி நாட்கள் உட்பட வேலை செய்கின்ற மாதமொன்றுக்கு (25 நாட்களுக்கு) ஒருவருக்கு ரூபா 55,000/- வீதம் கொடுப்பனவு செலுத்தப்படும்.

குறித்த சேவைகள் பெறுவது தொடர்பான இறுதிமுடிவு மாநகர ஆணையாளருக்கு உரித்தானது.

சட்டத்தரணி ரோஹினி திசாநாயக்க
மாநகர ஆணையாளர்
கொழும்பு மாநகர சபை
நகர மண்டபம், கொழும்பு 07.

(அலுவலக உபயோகத்திற்காக)

கொழும்பு மாநகர சபையில் நாளாந்த சேவையை கொள்வனவு செய்யும் அடிப்படையில் தொழிநுட்ப உத்தியோகத்தர்களின்/ படவரைஞர் உத்தியோகத்தர்களின் சேவையை பெற்றுக்கொள்வதற்கான

மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) (Mr/Mrs/Ms)

2. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (தமிழில்) (.....

3. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :-

4. I. நிரந்தர விலாசம் (தமிழில்) :- .....
II. நிரந்தர விலாசம் (ஆங்கில பெரிய எழுத்தில்)
III. தற்காலிக விலாசம் (தமிழில்) :-

5. பிறந்த திகதி: வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ நாள் ☐☐

6. ஓய்வுபெற்ற திகதி:- .....

7. ஓய்வுபெற்ற திகதிக்கு வயது:- .....

8. தேசிய அடையாள அட்டை இல: ☐☐☐☐☐☐☐☐☐☐

9. தொலைபேசி இலக்கம் : தனிப்பட்ட : .....அலுவலக:-.....

10. கல்வி தகைமைகள்: க.பொ.த. (சா.த.) சுட்டெண் :- ..... வருடம்:- .....

பாடம்	தரம்	பாடம்	தரம்
.....	.....	.....	.....
.....	.....	.....	.....
.....	.....	.....	.....
.....	.....	.....	.....
.....	.....	.....	.....
.....	.....	.....	.....
.....	.....	.....	.....
.....	.....	.....	.....
.....	.....	.....	.....

க.பொ.த. (உ.த.) சுட்டெண் :- ..... வருடம்:- .....

பாடம்	தரம்
.....	.....
.....	.....
.....	.....
.....	.....
.....	.....

11. இறுதியாக கடமையாற்றிய திணைக்களமும் பதவியும்:- .....

12. ஓய்வுபெறும் போது இருந்த சம்பள முறை:- .....

13. இலங்கை தொழிநுட்ப சேவை பிரமாணக்குறிப்புக்கு அமைய III ஆம் தரத்திற்குரிய தமைமைகள் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் (கடித ஆவணங்கள் மூலம் நிரூபித்தல் வேண்டும்.)

14. மேலதிக தகைமைகள்:- .....

மேலே என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவின்படியும் நம்பிக்கையின் படியும் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதிமொழிவதோடு, ஏதும் தகவலொன்று பொய்யானது அல்லது பிழையானது என நான் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட முன்னர் கண்டுப்பிடிக்கப்பட்டால் நான் அந்த பதவிக்கு தகுதியற்றவராவேன் என்பதையும், நியமனம் பெற்ற பின்னர் கண்டறியப்பட்டால் நான் சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி:.....

.....
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

இலங்கை போக்குவரத்து சபை
அழைப்பு

இபோச ஷாலிக்கா மைதானத்தை ஒரு முதற்தர கிரிக்கட் மைதானமாக அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவிற்கான அழைப்பு

RFP Ref/ No.: SLTB/TS/CIVIL/2022

1. இபோச ஷாலிக்கா மைதானத்தை முதற்தர கிரிக்கட் மைதானமாக அபிவிருத்தி செய்வதற்காக தகுதியுள்ள முன்மொழிவாளர்களிடமிருந்து முன்மொழிவுகளுக்கான முத்திரையிடப்பட்ட கோரிக்கைகளை இலங்கை போக்குவரத்து சபையின் சார்பாக, இபோச உயர் மட்ட பெறுகைக் குழுத் தலைவர் இத்தால் அழைக்கின்றார். தெரிவு செய்யப்பட்ட கோரிக்கையாளர் மற்றும் இபோச ஆகியன இணைந்து அபிவிருத்தி செய்யப்பட்ட ஷாலிக்கா மைதானத்தை முகாமைப்படுத்துவார்கள்.
2. பின்வரும் தகைமைகள் மற்றும் நிதியிடல் ஆற்றலுள்ள முன்மொழிவாளர்கள் மாத்திரமே ஆர்வ வெளிப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.
   i. தற்போது முதலாம் வகுப்பு கிரிக்கட் விளையாடுவதற்காக இலங்கையின் கிரிக்கட்டிற்கான ஆளும் அமைப்பாகிய இலங்கை கிரிக்கட்டினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு பெற்ற கிரிக்கட் அணிகள் மாத்திரமே முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.
   ii. தேவைப்படும் முதலீட்டை வழங்குவதற்கான நிதியிடல் ஆற்றலை முன்மொழிவாளர் கொண்டிருத்தல் வேண்டும்.

   மேலேயுள்ள i மற்றும் ii இற்கான அவர்களின் தகுதித்தன்மைக்கான ஆவணச் சான்றை சமர்ப்பிப்பதற்கு முன்மொழிவாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
3. 2022.02.28 ஆம் திகதியிலிருந்து 2022.03.21 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000.00 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு -05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை, பெறுகைக் குழுச் செயலாளரின் அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலுள்ள முழுமையான ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். ஆர்வ வெளிப்பாடானது கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே பாவிக்கப்படல் வேண்டும்.
4. சமர்ப்பிக்கப்படும் ஆர்வ வெளிப்பாடுகள் 2022.06.22 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் ஆர்வ வெளிப்பாட்டாளரினால் கையொப்பமிட்டு அவரது இலட்சினை பதிக்கப்படல் வேண்டும்.
6. ஆர்வ வெளிப்பாடுகள் முத்திரையிடப்பட்ட தபாலுறையிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். முத்திரையிடப்பட்ட உறையானது 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' ஆகியவற்றை அடக்கியிருப்பதுடன் உறையின் இடது பக்க மேல் மூலையில் "RFP for development of SLTB Shalika ground into a First Class Cricket Ground" என்ற சொற்கள் குறிப்பிடப்பட்டு 2022.03.22 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை, பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக பராமரிக்கப்படும் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அதே முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
7. மூடும் நேரத்திற்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் ஆர்வ வெளிப்பாடுகள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
8. ஆர்வ வெளிப்பாடுகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் முன்மொழிவாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே அவைகள் திறக்கப்படும்.
9. இபோச பெறுகைக் குழுவானது ஒன்று அல்லது அனைத்து ஆர்வ வெளிப்பாடுகளையும் இச்செயற்பாட்டின் எந்த வேளையிலும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான சுயவிருப்ப அதிகாரத்தைக் கொண்டுள்ளதுடன் ஆர்வ வெளிப்பாட்டை தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் தொடர்பான எவ்வித ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கும் இலங்கை போக்குவரத்து சபையானது பொறுப்பேற்க மாட்டாது.

தலைவர்,
இபோச பெறுகைக் குழு,
இலங்கை போக்குவரத்து சபை,
இல. 200, கிருள வீதி,
கொழும்பு-05.

விசாரணைகள்: **செயலாளர், பெறுகைக் குழு,**
தொலைபேசி: 011 7706110, 0771056110.
தொலைபேசி/ தொலைநகல்: 011 2588457

அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட நியமிக்கப்பட்டவர்களின் தகுதிகளை ஆராயும்: -

இல.	பெயர் மற்றும் விலாசம்	பதவி
1	திரு. டி.எம்.எல். பண்டாரநாயக்க இலக்கம். 146 ஹெலமுதுன, எட்டம்பிட்டிய வீதி பண்டாரவளை.	கமத்தொழில் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர்
2	திரு. ஆர்.எம்.டபிள்யூ.எஸ். சமரதிவாகர இலக்கம். 21 சமகி மாவத்தை, இலுப்புகெதர வீதி குருநாகல்.	கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர்
3	திரு. எஸ்.ஜே.எஸ். சந்திரகுப்த இலக்கம். 19/1 ஜயந்தி மாவத்தை, நல்லுருவ பாணந்துறை.	விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர்
4	திரு. எஸ்.டி. பண்டிகோரளே சரசவி அசபுவ, ஹபுகல, காலி.	கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர்.
5	திரு. கே.ஜி. விஜேசிறி இலக்கம். 148 எச் ரஸ்ஸபான வீதி, இஹல போமிரிய கடுவெல.	கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி (இராஜாங்க அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர்
6	திரு. டபிள்யூ.எம்.எம்.பீ. வீரசேகர இலக்கம். 670/21AT பம்புருகஹஹேன வீதி, தலவத்துகொட.	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டவர்
7	திரு.ஜயந்த தர்மதாச இலக்கம். 07, லொண்டன் டெரஸ், கொழும்பு 07.	தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர்
8	திரு. டபிள்யூ.பீ.வீ. தயாரத்ன, இலக்கம். 22/22, போதிராஜாராம வீதி பெப்பிலியான.	இலங்கை பிணயங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டவர்
9	திரு. ஏ.எச்.டபிள்யூ. அம்பேவத்த இலக்கம். 110 ஏ, கந்தவத்தை வீதி, நுகேகொட.	இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர்
10	திரு.சஜீவ ராஜபக்ஷ இலக்கம். 9/31சீ, பெரேரா மாவத்தை, திவுல்பிட்டிய பொரலஸ்கமுவ.	மக்கள் வங்கியின் தலைவராக நியமிக்கப்பட்டவர்
11	திரு. லலித் பியும் பெரேரா, இலக்கம். 112/12எப், கந்தேவத்த டெரஸ், நுகேகொட.	தேசிய லொத்தர் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர்
12	திரு. ஸ்டபன் அபேசிங்க இலக்கம். 40/7, புல்லர்ஸ் லேன் கொழும்பு 07	இலங்கை கடற்றொழில் கூட்டுத் தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர்
13	திரு. தமித விக்கிரமசிங்க இல. 191/1, சாம மாவத்தை, நாவல வீதி, நுகேகொட.	தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர்
14	திரு. என்.டி.எம். விஜேசேகர இலக்கம் 5 அப்பர் டிக்சன் வீதி, காலி.	கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர்
15	திரு. மேவன் லசித் சுபசிங்க. ஆராச்சி இலக்கம், 1/296, நுகேகொட வீதி, பெப்பிலியான, பொரலஸ்கமுவ.	நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர்
16	டாக்டர் ரசித விஜேவந்த இலக்கம். 27/385 மேஜர் வசந்த குணரத்ன மாவத்தை மஹர, கடவத்த.	தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்துகை அதிகாரசபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர்
17	திரு. ஜே. டபிள்யூ .எம்.ஜே.பீ.கே. ரத்நாயக்க இலக்கம். 41/27 3வது லேன், டி.எம். கொழும்பகே மாவத்தை, கொழும்பு 05.	இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டவர்
18	திரு. அசோக பத்திரகே இலக்கம். 65/13, குமரகேவத்த வீதி, விக்கிரமசிங்க மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்ல.	வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார் லயின் நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர்

மேற்குறிப்பிட்ட பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட நபர்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் 2018 சனவரி மாதம் 22ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் முறையாகக் கையொப்பமிட்டு, **"செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே"** என்ற விலாசத்திற்கு 2022 மார்ச் மாதம் 13ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777300 ஊடாக அல்லது **highposts_c@parliament.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

அவ்வெழுத்து மூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய் மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் இடம் பெற்றுள்ளது. **(www.parliament.lk)**

குழுச் செயலாளர்,
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே
2022 பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி.

ஹம்பாந்தோட்டை நீர்ப்பாசனத்திட்டத்தின் வளவை கங்கையின் குறுக்காக உலர்ந்த தடையை நிர்மாணிப்பதற்காக காணி சுவீகரித்தல் காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 07ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் (திருத்தம்)
குறியீட்டு இலக்கம்:- DSAM/LAN/08/AQ/26

அ.க.பி. 466 இன் இணைப்பு 61 இற்கான படிவ இலக்கம் 63 இன் துண்டு இலக்கம் 439இல் குறிப்பிடப்படும் அளவின் 0.0130 ஹெக்டயார் எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டு அரசுக்குச் சுவீகரிக்கப் பட்டுள்ளது. மேலதிக விபரங்களிற்காக 2021.12.20ஆம் திகதிய 2259/4 இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமாணி அறிவித்தலின் 2A பக்கத்தைப் பார்வையிடவும்.

என்.டீ.பி. ரணசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
அம்பலந்தோட்டை.

2022 பெப்ரவரி 17ஆம் திகதி
அம்பலந்தோட்டை பிரதேச செயலகத்தில்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
சுத்திகரிப்பு பிரிவு
கேள்வி அறிவித்தல்

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புப் பிரிவிலுள்ள வசதிகள் இடப்பரப்பின் தரைக்கு கொங்கிறீட் இடுவதற்கான கேள்வி

REF-PD/WORKS/03/2021

களனி, சப்புகஸ்கந்த, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்புப் பிரிவிலுள்ள வசதிகள் இடப்பரப்பின் தரைக்கு கொங்கிறீட் இடுவதற்கான பணிக்கான விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (CPC) சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் கோருகின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் www.ceypetco.gov.lk மீளளிக்கப்படாத கட்டணமான 15,000 ரூபாவை (ரூ. 13,888.89 + 8% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-03-21ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கொழும்பு-09, இல. 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளர் அலுவலகத்தில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

தெளிவுபடுத்தல்கள் (ஏதும்) இருப்பின் பின்வரும் தொலைபேசி / தொலைநகல் இலக்கங்களினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
மே/பா பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர்
(பராமரிப்பு மற்றும் செயற்றிட்டங்கள்),
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
சுத்திகரிப்புப் பிரிவு,
சப்புகஸ்கந்த, களனி.

தொலைபேசி: +94 11 2400684/ 2400427/ 2400431
தொலைநகல்: + 94 11 2400684/ 2400431/ 2400436

அறிவித்தல்

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றத்தில்

குடியியல் முறை நடவடிக்கைக் கோவையின் அத்தியாயம் 24 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நம்பிக்கைப் பொறுப்புகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 112 இன் கீழான விண்ணப்பம்

வழக்கிலக்கம் : Misc/74/2022.
தன்மை : தரும நம்பிக்கைப் பொறுப்பு
நடவடிக்கை : சுருக்கமுறை
பெறுமதி : 50 இலட்சம்.

1. சுந்தரலிங்கம் சுரேஸ்.
   தலைவர், திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத ஆலய பரிபாலன சபை, கோவில் வீதி, திருக்கோவில் -1
2. வன்னியசிங்கம் ஜயந்தன் வண்ணக்கர், திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத ஆலய பரிபாலன சபை, கோவில் வீதி, திருக்கோவில் 1.
3. கனகசபை சபாரெத்தினம் உபதலைவர் திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத ஆலய பரிபாலன சபை, கோவில் வீதி திருக்கோவில்-1.
4. அழகுதுரை செல்வராஜா செயலாளர். திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத ஆலய பரிபாலன சபை, கோவில் வீதி, திருக்கோவில்-1.
5. கோவிந்தபிள்ளை கிருஸ்ணமூர்த்தி பொருளாளர் (தனாதிகாரி) திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத ஆலய பரிபாலன சபை, கோவில் வீதி, திருக்கோவில்-1
6. இராசையா லோகிதராஜா கணக்குப்பிள்ளை திருக்கோவில் சித்திர வேலாயுத ஆலய பரிபாலன சபை, கோவில் வீதி, திருக்கோவில் -1

- மனுதாரர்கள் -

திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களும், நம்பிக்கைப் பொறுப்பாளர்களுமான மேற்கூறிய மனுதாரர்களால் நானாவிதம்/74/2022 இலக்க வழக்கானது அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ் வழக்கில் பொதுவான அக்கறை கொண்ட எவரும் இருப்பின் நீதிமன்றின் முன் அனுமதியுடன் திறத்தவராக உள்வரலாம் என இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

இவ் அறிவித்தலானது குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் பிரிவு 16 இன் கீழ் செய்யப்படுகின்றது.

அடுத்த தவணை : 23.03.2022.

"மன்றின் கட்டளைப்படி"

திகதி. 28-2-2022

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
அக்கரைப்பற்று

பெருந்தோட்டத்துறை அமைச்சு
தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு
பனை அபிவிருத்தி சபை

வெற்றிடங்கள்

பனை அபிவிருத்தி சபையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கான இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெற்றிடம் : பிரதிப்பொது முகாமையாளர்

சிரேஷ்ட முகாமையாளர் பிரிவிற்காக இணைத்துக்கொள்ளப்படுகின்றார்கள்

தகைமைகள்

வெளி விண்ணப்பதாரிகள்

முகாமைத்துவம் / விஞ்ஞானம் / கமத்தொழில் / பொது நிர்வாகம் / வணிக நிர்வாகம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பட்டம்

மற்றும்

குறித்த துறையில் முதுநிலை பட்ட தகைமை அல்லது வெற்றிடத்திற்கு பொருத்தமான விடயத்துறையில் அங்கீகாரம் பெற்ற தொழில்முறை நிறுவனத்தில் அங்கத்தவராயிருத்தல்

மற்றும்

கூட்டுத்தாபனத்தில், திணைக்களத்தில் அல்லது அங்கீகாரம் பெற்ற வணிக நிறுவனத்தில் " முகாமைத்துவ மட்டத்தில்" பதவியில் குறைந்தது 15 வருட முன் அனுபவம்.

உள்ளக விண்ணப்பதாரிகள்

மேல் குறிப்பிடப்பட்ட அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல்.
பதவி வெற்றிடத்திற்கு உரித்தான விடயத்துறையினுள் முகாமையாளர் (MM 1-1) பிரிவில் 1 தர பதவியில் குறைந்தது 5 வருட சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

வயது

35 வயதிற்கு குறையாத 55 வயதிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.

மற்றயவை:

அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் :
i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவியின் சேவையை சிறப்பாக வழங்க மற்றும் நாட்டின் எந்த ஒரு பிரதேசத்திலும் சேவையாற்ற உடல் மற்றும் உல ரீதியாக தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த கதாப்பாத்திரமாக இருத்தல் வேண்டும்.
iv. பிரதான காரியாலயம் யாழ்ப்பாணத்தில் இருத்தல் வேண்டும்.

சம்பளப் பிரிவு : HM 1-1
சம்பள அளவீடு : ரூபா.80,295/- (2,270x15) – 114,345/-
வயது : 35 வயதிற்கு குறையாத 55 வயதிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.
ஆட்சேர்ப்பு முறை : நேர்முகத் தேர்வின் மூலம் இடம்பெறும்.
விண்ணப்பங்கள் :

- சுயவிபரக்கோவை, கல்வித்தகைமைகள், தொழில்முறை தகைமைகள் மற்றும் முன்அனுபவம் தொடர்பான விடயங்கள் அடங்கிய விண்ணப்பங்கள், உங்களின் தகைமைகளை உறுதிப்படுத்தும் விதத்தில் சான்றிதழ்களின் பிரதிகளுடன் அனுப்பி வைத்தல் வேண்டும். அரச சேவை / கூட்டுத்தாபனம் / திணைக்களங்களில் தற்போது சேவையாற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் பிரதானியின் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பங்களும் **2022.03.14** அல்லது அதற்கு முன் **"தலைவர், பனை அபிவிருத்தி சபை, இல 498, காலி வீதி, கொழும்பு 06"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலின் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். நேரம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருந்தால், அது குறித்து ஆட்சேர்ப்பு ஆணையம் முடிவுகளை மேற்கொள்ளும். எந்தவொரு வடிவத்திலும் ஆதரவு திரட்டல் மேற்கொள்வது தகுதியற்ற தன்மைக்கான காரணியாக அமையக்கூடும்.

தலைவர்,
பனை அபிவிருத்தி சபை,
இல 498, காலி வீதி,
கொழும்பு 06.

தெஹிவளை - கல்கிசை மாநகர சபையின் பெறுகை அறிவித்தல்

மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு கொள்வனவாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோருதல்

தெஹிவளை - கல்கிசை மாநகர சபையின் படோவிட மீள்சுழற்சி நிலையத்தில் சேரும் மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களுக்காக (பெட் போத்தல், கண்ணாடி, காகிதங்கள், காகித அட்டைகள், சிரட்டைகள், பிளாஸ்டிக், வேறுபடுத்தப்பட்ட விளையாட்டுப் பொருட்கள், பொலித்தீன், பிளாஸ்டிக், பியர் டின்கள், உருக்கு, பிளாஸ்டிக் மூடிகள், இலத்திரனியல் கழிவுப்பொருட்கள், யோகட் கோப்பைகள், போல்பொயின்ட் பேனைகள், அப்புறப்படுத்தப்பட்ட பற் தூரிகைகள், அலுமினிய உறைகள் - Aluminum Foil, அலுமினியம் உணவு பெட்டிகள் - Aluminum Lunch Box, பாவிக்கப்பட்ட பழைய டயர்கள், இறப்பர் சார்ந்த உற்பத்திகள்) கொள்வனவாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தேவைப்பாடுகள் (கட்டாயம்):

01. பதிவு செய்யப்பட்ட வியாபார நிறுவனமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்.
02. இயைபுடைய துறையில் சிறந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.
03. இடைத் தரகர்கள் முன்வரக் கூடாது என்பதுடன், மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருட்களிலிருந்து உற்பத்திகளை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்கள் மட்டும் நேரடியாக முன்வரல் வேண்டும். (இதனை உறுதி செய்வதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
04. விற்பனை செய்யப்பட்ட பொருட்களை போக்குவரத்து செய்வதற்குத் தேவையான வசதிகளை கொள்வனவாளர் ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

வியாபார நிறுவனத்தின் கடிதத்தலைப்பில் மேற்கொள்ளப்படும் வேண்டுகோள் ஊடாக அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் தெஹிவளை கல்கிசை மாநகர சபையின் மக்கள் சுகாதாரம் மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவ திணைக்களத்திலிருந்து இதற்கான கேள்வி மாதிரிப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (விசாரணைகளுக்கு 0112735438 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்)

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப்படிவங்களை ''மாநகர ஆணையாளர், தெஹிவளை - கல்கிசை மாநகர சபை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாநகர ஆணையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களுக்காக விலைமனுக்களை கோருதல் - 2022'' எனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். (மூலப் பிரதியை ஒரு கடித உறையிலும் நகல் பிரதியை இன்னொரு கடித உறையிலும் இடுதல் வேண்டும் என்பதுடன் நகல் பிரதியை உள்ளிடும் கடித உறையில் நகல் பிரதியெனக் குறிப்பிடுதல் வேண்டும்)

கேள்விப்படிவங்கள் வழங்குதல் 2022-03-14ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் 2022-03-16ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப்படிங்கள் ஏற்றுக்கொள்ளுதல் முடிவுறுத்தப்படும். கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பித்த நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது சகல கேள்விகளையும் எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை தெஹிவளை - கல்கிசை மாநகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

எம்.எம்.சீ.கே.கே. மான்னப்பெரும,
மாநகர ஆணையாளர்,
தெஹிவளை - கல்கிசை மாநகர சபை.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 28ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.